# Indian Polity Notes Part 9 in Tamil

## 9] மத்திய அரசு (பகுதி – V)

### குடியரசுத் தலைவர்

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர் தலைமையில் நாடாளுமன்ற அரசு அமைய வழி வகுக்கிறது.
- இவ்வரசு சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை என 3 அங்கங்களைக் கொண்டது.
- இந்தியாவின் (நாட்டின்) தலைவராக குடியரசுத் தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டும். (சரத்து – 52).

**சரத்து – 53**

- இந்திய அரசியலமைப்பின்படி, குடியரசுத் தலைவர், இந்தியக் குடியரசின் தலைவராகவும், இந்திய ஒன்றியத்தின் (யூனியன்) நிருவாகத் தலைவராகவும் விளங்குகிறார். மேலும் நீதித்துறைக்கும் பொறுப்புடையவராவார்.
- நாட்டின் நிர்வாகத் தலைவராக இருக்கும் குடியரசுத் தலைவர் தனது பணீயினை நேரடியாகவோ அல்லது தனக்கு கீழுள்ள அதிகாரிகள் மூலமாகவோ நிறைவேற்றலாம்.
- குடியரசுத் தலைவர் இந்திய ராணுவத்தின் உயர் அதிகாரத் தலைவராக உள்ளார். இதனால் போரினையும் அமைதியையும் அறிவிக்கும் அதிகாரம் படைத்துள்ளார்.
- குடியரசுத் தலைவரின் ராணுவ அதிகாரங்கள் நாடாளுமன்றச் சட்டத்தினால் ஒழுங்கு முறைப்படுத்தப்படுகிறது.

**குடியரசுத் தலைவர் தேர்தல்(சரத்து – 54)**

- தேர்தல் குழுவின் உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**இந்தக் குழுவில் இடம் வகிப்பவர்கள்**

- நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.
- மாநில சட்டமன்றத்தின் கீழவையான சட்டப்பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்.
- மத்திய ஆட்சி எல்லையான புதுச்சேரி மற்றும் டெல்லி 1995 லிருந்து இத்தேர்தலில் பங்கேற்கிறது (70 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 1992)

**தேர்தல் முறை (சரத்து – 55)**



winmeen.com

- ஒற்றைமாற்று விகிதம் பிரதிநிதித்துவ முறையில் ரகசிய முறை வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓட்டுகளுக்கும் சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஓட்டுகளுக்கும் பிரதிநிதித்துவத்தின் அளவில் ஒரு சீர்மை இருப்பதற்காக இம்முறை ஏற்படுத்தப்பட்டது.

**மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஓட்டு மதிப்பு**

$$= \frac{\text{மாநிலத்தின் மக்கள்தொகை}}{\text{மாநில சட்டப்பேரவையின் தேர்ந்து எடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை}} * \frac{1}{1000}$$

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓட்டுக்களின் மதிப்பு**

$$= \frac{\text{மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அறிக்கப்பட்ட மொத்த ஓட்டுகள்}}{\text{நாடாளுமன்ற இரு அவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை}}$$

- இந்த சரத்தில் மக்கள்தொகை என்பது 1971 ன் கணக்கெடுப்பின்படி என்பதாகும். இந்த மக்கள்தொகை 2026 வரை நடக்கும் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கு பொருந்தும் என 84 வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் (2001) படி மாற்றப்பட்டது.

**பதவிக்காலம் (சரத்து – 56)**

- இவரின் பதவிக்காலம், பதவி ஏற்ற தினத்திலிருந்து 5 ஆண்டுகள் ஆகும்.
- குடியரசுத்தலைவர் பதவி விலகல் கடிதத்தினைக் குடியரசுத் துணைத் தலைவரிடம் தர வேண்டும்.
- குடியரசுத் தலைவரை அரசியலமைப்பை மீறியதாக அப்பதவியிலிருந்து சரத்து-61 ல் கூறிய வகைமுறையின்படி நீக்க முடியும்.
- புதிய குடியரசுத் தலைவர் பதவியேற்கும் வரை பதவியில் நீடிக்கலாம்.
- மக்களவைத் தலைவருக்கு (சபாநாயகருக்கு) உடனடியாக குடியரசுத் தலைவர் பதவி விலகல் கடிதம் பற்றிய தகவலை குடியரசுத் துணைத் தலைவர் தெரிவிக்க வேண்டும்.

**சரத்து - 57**

- மீண்டும் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கத் தகுதி படைத்தவர்.

**குடியரசுத் தலைவர் பதவிக்கான தகுதிகள்(சரத்து – 58)**

a) இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்

b) 35 வயது நிறைந்தவராக இருக்க வேண்டும்

c) நாடாளுமன்ற மக்களவைக்கு (லோக்சபை) போட்டியிடத் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்.

- மத்திய/மாநில அரசாங்கங்களின் கீழ் ஆதாயம் தரும் பதவிகள் எதையும் வகித்தல் கூடாது.

(குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், மாநில ஆளுநர், மத்திய, மாநில அமைச்சர் போன்றவைகள் ஆதாயம் தரும் பதவியாக கருத முடியாது.)

**சரத்து – 59**

- நாடாளுமன்றத்தின் ஏதேனும் ஒரு அவையின் உறுப்பினராகவோ அல்லது மாநிலங்களின் ஏதேனும் ஒரு அவையின் உறுப்பினராகவோ பதவி வகிக்கக் கூடாது. அப்படி உறுப்பினர் பதவி ஏற்றிருந்தால், குடியரசுத் தலைவராக பதவியேற்ற நாளிலிருந்து அந்த உறுப்பினர் பதவி காலியானதாக கருதப்படும்.
- ஆதாயம் தரும் பதவி வகித்தல் கூடாது.
- அதிகாரப்பூர்வ குடியிருப்பு, சம்பளம்(ரூ, 1,50,000) மற்றும் பிற வசதிகளையும் பெறுவதற்கு பாத்தியப்பட்டவர்.
- அவரது பதவிக்காலத்தில் அவரது ஊதியம் மற்றும் பிற வசதிகளை குறைத்தல் கூடாது.

**பதவிப் பிரமாணம் (சரத்து – 60)**

குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் இந்தியத் தலைமை நீதிபதியின் முன்னிலையில்/ உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதியின் முன்னிலையில் to preserve, Protect,defend the constitution என்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பதவி நீக்கம் செய்யும் முறை (சரத்து - 61)**

- இந்திய அரசியலமைப்பினை மீறியதற்காக மட்டுமே குடியரசுத் தலைவரை பதவி நீக்கம் செய்ய இயலும்.

- பதவி நீக்கக் குற்றச்சாட்டு நாடாளுமன்ற இரு அவைகளில் ஏதேனும் ஒரு அவையில் கொண்டு வரலாம்.
- எந்த அவையில் கொண்டு வரப்படுகிறதோ அந்த அவையின் மொத்த உறுப்பினர்களுள் நான்கில் ஒரு பங்கு உறுப்பினர்களுக்கு குறையாத உறுப்பினர்கள் கையொப்பமிட்ட ஒரு தீர்மானத்தின் வாயிலாகக் குற்றஞ்சாட்டலாம். அந்தக் குற்றச்சாட்டின் நகலை 14 நாட்களுக்கு முன் குடியரசுத் தலைவருக்கு கொடுக்கப்பட வேண்டும்.
- அவையின் மொத்த உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத உறுப்பினர்கள் நிறைவேற்ற வேண்டும்.
- மற்றொரு அவையானது அந்த குற்றச்சாட்டினைப் புலனாய்வு செய்யும், அப்போது குடியரசுத் தலைவர் முன்னிலையாகி தனது விளக்கத்தை எடுத்துக்கூற உரிமை உண்டு.
- அந்த அவையிலும் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத உறுப்பினர்களால் குற்றச்சாட்டு நிறைவேற்றப்பட்டால் அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து பதவி நீக்கப்பட்டதாக கருதப்படுவார்.

**காலியிடத்தை நிரப்புதல் (சரத்து – 62)**

- குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் முடியும் னுன்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
- மரணம், பதவி விலகல் பதவி நீக்கம் போன்ற காரணங்களால் குடியரசுத் தலைவர் பதவிக்காலம் முடியுற்றால் 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

**குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்**

**நிர்வாக அதிகாரங்கள் (Executive Function)**

- நாட்டின் நிருவாகம் இவரது பெயரால் மேற்கொள்ளப்படுகிறது.
- பிரதம மந்திரியை (பிரதம அமைச்சர்) நியமனம் செய்கிறார். அவரது ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்களை நியமிக்கிறார்.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் பிற நீதிபதிகளையும், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் பிற நீதிபதிகளையும் நியமனம் செய்கிறார்.

- மாநிலங்களின் ஆளுநர் நியமனம்.
- இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர், கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவர் நியமனம்.
- மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களையும், பொதுப்பணித் தேர்வாணைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்.
- பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்களுக்கானத் தனி அலுவலர்கள் நியமனம்.
- பிற்பட்டோர் நலக்குழு, மொழி வாரி சிறுபான்மையினருக்கானத் தனி அலுவலர் நியமனம் போன்றவைகளை நியமிக்கும் அதிகாரம் உள்ளது.

**சட்டமியற்றுத் துறை அதிகாரங்கள்**

நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் அனைத்துச் சட்டங்களும் இவரது ஒப்புதல் பெற்ற பின்னரே சட்டமாக வெளிவரும்.

- நாடாளுமன்ற அவைகளுக்கு செய்தி அனுப்புவது. அவைகளை கூட்டும் அதிகாரம் (Summoning) ஒத்திவைக்கும் (proroguing) அதிகாரம்(சரத்து-85).
- நாடாளுமன்ற அவை நிகழ்த்துவது (சரத்து – 86)
- நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தைத் துவக்கி அதில் உரை நிகழ்த்துகிறார்.(சரத்து - 87)
- கூட்டுக் கூட்டத்தை கூட்டுவது மற்றும் உரை நிகழ்த்துவது.(சரத்து -108)
- கலை, அறிவியல், இலக்கியம் மற்றும் சமூக சேவை போன்ற துறைகளில் சிறப்புப் பெற்றவர்களில், 12 உறுப்பினர்களை மாநிலங்களவைக்கு (மேலவை) நியமிக்கும் அதிகாரம் உள்ளது.
- மக்களவைக்கு (கீழவைக்கு) 2 ஆங்கிலோ இந்தியர்களை நியமிக்கும் அதிகாரம் உள்ளது.
- நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு ஒப்புதல் அளிப்பது (சரத்து-111)
- பண மசோதா இவரது பரிந்துரை பெற்றே மக்களவையில் தாக்கல் செய்யப்படுகிறது.
- அவசரகால சட்டம் உண்டாக்கும் அதிகாரம்

**மன்னிக்கும் அதிகாரங்கள் (Pardoning) (சரத்து - 72)**

- இந்திய நீதிமன்றங்கள் மற்றும் ராணுவ நீதிமன்றங்கள் வழங்கும் தண்டனைகளை மன்னிக்கும் அதிகாரம்.
- Reprive – தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் அதிகாரம்
- Respite - சிறப்புக் காரணங்களுக்காக தண்டனையைக் குறைப்பது
- Remission – தண்டனைக் காலத்தைக் குறைப்பது
- Commutation – ஒருவகைத் தண்டனையை மற்றொரு வகையாக மாற்றுதல்.

**இராணுவ அதிகாரங்கள் (Military powers)**

- இந்திய ராணுவத்தின் தலைவர் என்கிற முறையில் முப்படைத் தளபதிகளை நியமிப்பது.
- போர் மற்றும் அமைதியை அறிவிப்பது.

**தூதாண்மை அதிகாரங்கள்(Diplomatic powers)**

- பன்னாட்டு அமைப்புகளில் பிரதிநிதித்துவம்
- வெளிநாட்டுத் தூதுவர்களை நியமிக்கும் அதிகாரம்
- சர்வதேச ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் குடியரசுத் தலைவரால் நடத்தப்படும்.

**நிதி அதிகாரம் (Financial powers)**

- ஆண்டு வரவு-செலவு கணக்கு (நிதி நிலை அறிக்கை) இவரது அனுமதியுடன் நாடாளுமன்றத்தில், மத்திய நிதி அமைச்சரால் தாக்கல் செய்யப்படுகிறது.
- இவரது பரிந்துரையில்லாமல் எந்த ஒரு நிதி மசோதாவும் (பண மசோதா) நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது.
- இந்திய அவசர தொகுப்பு நிதியிலிருந்து (Contingency fund of India) பணம் எடுப்பது, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து செலவழிக்கும் உரிமை குடியரசுத் தலைவருக்கு உள்ளது.
- அவர் அந்நிதியிலிருந்து நாடாளுமன்றத்தில் இறுதி அங்கீகாரம் பெறும் முன்னர், அரசின் எதிர்பாராச் செலவுகளைச் சமாளிக்க அரசுக்கு முன்பணம் வழங்க அதிகாரம் பெற்றுள்ளார்.
- மானியக் கோரிக்கைகள்(Demand for grants) குடியரசுத் தலைவரின் பரிந்துரை இல்லாமல் கேட்டல் கூடாது.

- நிதிக் குழுவை நியமிப்பது.

**நெருக்கடிக் கால அதிகாரங்கள்**

- இந்திய நிலைமைகளை சமாளிக்க குடியரசுத் தலைவருக்கு சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவை, "நெருக்கடி நிலை அதிகாரங்கள்" என்றழைக்கப்படுகின்றது.
- மூன்று நெருக்கடி நிலை அதிகாரங்களை குடியரசுத்தலைவர் பெற்றுத் திகழ்கிறார்.
  1. தேசிய நெருக்கடி நிலைமை (சரத்து – 352)
  2. மாநில நெருக்கடி நிலைமை (சரத்து – 356)
  3. நிதி நெருக்கடி நிலைமை (சரத்து – 360)

**அவசரச் சட்டம் உண்டாக்கும் அதிகாரம்**

**(Ordinance Making Power) (சரத்து – 123)**

- குடியரசுத் தலைவரின் சட்டமியற்றுத் துறை அதிகாரங்களிலேயே மிக முக்கியமான அதிகாரம் அவசரச் சட்டம் உண்டாக்கும் அதிகாரம்.
- நாடாளுமன்ற இரு அவைகளும் கூட்டத்தொடரில் இல்லாத போது உடனடி தேவை என குடியரசுத் தலைவர் திருப்தி ஏற்பட்டால் அவசரச் சட்டம் பிரப்பிக்கலாம்.
- நாடாளுமன்ற ஒரு அவை கூட்டத்தொடரில் இருந்தால் அவசரச் சட்டம் பிறப்பிக்கத் தடை இல்லை.
- நாடாளுமன்றம் கூடி 6 வாரத்திற்குள் இது அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- நாடாளுமன்ற அவைகள் வெவ்வேறு தேதிகளில் மீண்டும் கூடுகிறது எனில், 6 வாரங்கள் என்பதை கணக்கிட பின்னால் கூடிய தேதியை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- இது நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்திற்கு இணையானது.
- அச்சட்டத்தை குடியரசுத் தலைவர் எந்த நேரத்திலும் திரும்பப் பெறலாம்.

**குடியரசுத் தலைவரின் அரசியல் சட்டப் பாதுகாப்பு**

**(Constitutional Protection) (சரத்து - 361)**

- குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர் ஆகியோர் தங்கள் அதிகாரங்களை மற்றும் கடமைகளை செயல்படுத்தியது குறித்து எந்த நீதுமன்றத்திலும் பதிலளிக்க கடமைப்பட்டவரல்ல.

- இவர்களது பதவிக்காலத்தில் குற்றவியல் நடவடிக்கைகளை தொடர முடியாது.
- 2 மாத அறிவிக்கைக்கு பிறகு உரிமையியல் வழக்கு தொடரலாம்.
- இவர்களுக்கெதிரான கைது அல்லது சிறைவைத்தலுக்கான பிடியாணை ஏதும் பிறப்பிக்க முடியாது.

**இந்திய குடியரசுத் தலைவர்கள்**

| | **பெயர்** | **பதவிக்காலம்** |
|---|---|---|
| 1 | டாக்டர் இராஜேந்திர பிரசாத்(1884-1963) | 26.1.1950 -13.5.1962 |
| 2. | டாக்டர் இராதாகிருஷ்ணன்(1888-1975) | 17.5.1963-13.5.1967 |
| 3. | டாக்டர் ஜாஹீர் ஹுசைன்(1897-1969) | 13.5.1967-3.5.1969 |
| 4. | வராஹகிரி வேங்கட கிரி(1894-1980) | 3.5.1969-20.7.1969 |
| * | நீதியரசர் முகமது ஹியத்துல்லா(1905-1995) | 20.7.1969-24.8.1969 |
| * | வராஹகிரி வேங்கடகிரி(1894-1980) | 24.8.1969-24.8.1974 |
| 5. | டாக்டர் பக்ருதீன் அலி முகமது(1905-1977) | 24.8.1974-11.2.1977 |
| * | பி.டி.ஜாட்டி(1912-2002) | 11.2.1977-<br>25.7.1977(acting) |
| 6. | நீலம் சஞ்சிவ் ரெட்டி(1913-1996) | 25.7.1977-25.7.1982 |
| 7 | கிலானி ஜெயில் சிங்(1916-1994) | 25.7.1982-25.7.1987 |
| 8. | ஆர். வெங்கட்ராமன்(1910-2009) | 25.7.1987-25.7.1992 |
| 9 | டாக்டர் சங்கர் தயாள் சர்மா(1918-1999) | 25.7.1992-25.7.1997 |
| 10 | கே.ஆர்.நாராயணன்(1920-2005) | 25.7.1997-25.7.2002 |
| 11 | டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம்(1931) | 25.7.2002-25.7.2007 |
| 12 | பிரதீபா தேவிசிங் பாடில்(1934) | 25.7.2007-25.7.2012 |
| 13 | பிரணப் முகர்ஜி (11.12.1935) | 25.7.2012-25.07.2017 |

| | | |
|---|---|---|
| 14 | ராம் நாத் கோவிந் (1.10.1945) | 25.07.2017 முதல் |

**குடியரசுத் துணைத் தலைவர்**

**சரத்து - 63**

குடியரசுத் துணைத் தலைவர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

**சரத்து - 64**

குடியரசுத் துணைத் தலைவர் மாநிலங்களவையின் பதவி வழித் தலைவராக இருப்பார்.

- குடியரசுத் தலைவராக செயல்படும்போது மாநிலங்களவையின் தலைவராக செயல்படக் கூடாது.
- குடியரசுத் தலைவராக செயல்படும்போது, மாநிலங்களவையின் தலைவர் என்கிற முறையில் ஊதியம் மற்றும் படித்தொகைகள் பெற உரிமை இல்லை.

**சரத்து – 65**

- குடியரசுத் தலைவர் இறந்து விட்டாலோ, ராஜினாமா செய்தாலோ அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்டாலோ காலியாக உள்ள அவ்விடத்தில் குடியரசுத் துணைத் தலைவர் குடியரசுத் தலைவராக செயல்படுவார்.
- குடியரசுத் தலைவர் நோய்வாய்ப்படுதல், வருகையில்லாமல் இருத்தல் அல்லது பிற காரணம் பொருட்டு அவர் தம் அலுவலகப் பணிகளைச் செய்ய முடியாமற் போனால் அச்சமயங்களிலும் குடியரசுத் துணைத் தலைவர் அப்பணியைச் செய்வார்.
- குடியரசுத் தலைவருக்குண்டான அனைத்து அதிகாரங்களும் பாதுகாப்புரிமைகளும் உண்டு. ஊதியங்கள், படித்தொகைகள் மற்றும் சிறப்புரிமைகளைப் பெற உரிமையுண்டு.

**குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் / தகுதிகள் (சரத்து - 66)**

- குடியரசுத் துணைத் தலைவர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்களால் ஒற்றை மாற்று விகிதம் பிரதிநிதித்துவ முறியில் ரகசிய முறை வாக்கெடுப்பின் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- நாடாளுமன்றத்தின் எந்த அவையிலோ அல்லது சட்டமன்ற உறுப்பினராக இருத்தல் கூடாது.

a) இந்தியக் குடிமகனாக இருத்தல் கூடாது.

b) 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்

c) மாநிலங்களவைக்கு உறுப்பினராகக் கூடிய தகுதி இருக்க வேண்டும்.

- மத்திய அல்லது மாநில அரசின் கீழ் ஆதாயம் தரும் பதவிகள் ஏதும் வகித்தல் கூடாது. (குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், ஆளுநர், அமைச்சர் போன்ற பதவிகள் ஆதாயம் தரும் பதவிகளாக கருத முடியாது)

**குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்காலம் (சரத்து - 67)**

- குடியரசுத் துணைத் தலைவர் தாம் பதவியேற்ற நாளிலிருந்து 5 ஆண்டுகள் அப்பதவியில் இருப்பார்.
- தனது பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் அளிக்க வேண்டும்.
- பதவி நீக்கம் செய்வதென்றால் அதற்கான தீர்மானம் 14 நாட்கள் அறிவிக்கைக்கு பின் மாநிலங்களவையில் கொண்டு வரப்பட வேண்டும். பின்பு அதனை மக்களவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- குடியரசுத் துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது.
- தனது பதவிக் காலம் முடிவடைந்த பின்னிட்டு மற்றொருவர் பதவி வகிக்க வரும் வரை தொடர்ந்து அப்பதவியில் நீடிக்கலாம்.
- குடியரசுத் தலைவருக்கு அடுத்தபடியாக, குடியரசுத் துணைத் தலைவர் இரண்டாவது இடத்தைப் பெற்றுத் திகழ்கிறார். இவருக்கு தனிப்பட்ட பணிகள் வரையறுக்கப்படவில்லை.

**காலியிடத்தை நிரப்புதல் (சரத்து - 68)**

- குடியரசுத் துணைத் தலைவர் **பதவிக்காலம் முடியும் முன்பே** தேர்தல் நடத்தி முடிக்க வேண்டும்.
- குடியரசுத் துணைத் தலைவர் பதவி, இறப்பு, பதவி விலகல் அல்லது பதவி நீக்கத்தின் காரணமாக காலியானால் அதனை நிரப்புவதற்கான தேர்தல் **இயன்ற அளவு விரைவாக** நடத்தப்படல் வேண்டும்.

**பதவிப் பிரமாணம் (சரத்து - 69)**

குடியரசுத் துணைத் தலைவர், குடியரசுத் தலைவர் முன்னிலையில் அல்லது குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் நபரின் முன்னிலையில், பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**எதிர்பாராத சூழ்ல்களில் குடியரசுத் தலைவரின் பணிகளை மேற்கொள்ளுதல்(சரத்து-70)**

குடியரசுத் தலைவரின் பணிகளை, குடியரசுத் துணைத் தலைவர் மேற்கொள்வது பொருத்தமானது எனத் தெரிந்தால் அதற்கான வகைமுறைகளை நாடாளுமன்றம் மேற்கொள்ளலாம்.

**குடியரசுத் தலைவர் அல்லது குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் தொடர்பான விடயங்கள் (சரத்து- 71)**

- குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் பற்றி எழும் சந்தேகம் மற்றும் சச்சரவுகளை ஆய்வு செய்து முடிவு செய்யும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திடம் உள்ளது. இதன் முடிவே இறுதியானது.
- தேர்தல் செல்லாது என உச்சநீதிமன்றம் அறிவித்தால், அது குடியரசுத் தலைவர் செய்த செயல்கள் “செல்லாது” என ஆகாது.
- குடியரசுத் தலைவர் தேர்தல் தொடர்பான விடயங்களுக்கு நாடாளுமன்றம் சட்டம் இயற்றி ஒழுங்குபடுத்தலாம்.

குடியரசுத் துணைத் தலைவர் மாநிலங்களைவையின் உறுப்பினர் அல்லாத காரணத்தால் அந்த அவையின் முதல் நடவடிக்கையில் வாக்களிக்க முடியாது.

குடியரசுத் துணைத் தலைவரின் மாத ஊதியம் 1,25,000. இதில் பாதி ஓய்வூதியமாக பெறலாம்.

**இந்திய குடியரசுத் துணைத் துணைத் தலைவர்கள்**

| | **பெயர்** | **பதவிக்காலம்** |
|---|---|---|
| 1. | சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன் (1888-1975) | 13.5.1952-14.5.1957 |
| 2. | சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன் (1888-1975) | 14.5.1957-12.5.1962 |
| 3. | ஜஹீர்ஹுசைன் (1897-1969) | 13.5.1962-12.5.1967 |
| 4. | வராஹகிரி வெங்கட கிரி (1894-1980) | 13.5.1967-3.5.1969 |

| | | |
|---|---|---|
| 5. | கோபால் ககாப் பதக் (1895-1982) | 31.8.1969-30.8.1974 |
| 6. | பி.டி.ஜாட்டி (1912-2002) | 31.8.1974-30.8.1979 |
| 7. | முகமது ஹிதயத்துல்லா (1905-1992) | 31.8.1984-8.8.1984 |
| 8. | இராமசாமி வெங்கடராமன் (1910-2009) | 31.8.1984-27.7.1987 |
| 9. | சங்கர் தயாள் சர்மா (1918-1999) | 3.9.1987-24.7.1992 |
| 10. | கே.ஆர்.நாராயணன் (1920-2005) | 21.8.1992-24.7.1997 |
| 11. | கிருஷ்ண காந்த் (1927-2002) | 21.8.1997-27.7.2002 |
| 12. | பைராங் சிங் செகாவத் (1923-2010) | 19.8.2002-21.7.2007 |
| 13. | முகமது ஹமித் அன்சாரி (1937) | 11.08.2007-11.08.2017 |
| 14. | வெங்கய்ய நாயுடு (1949) | 11.08.2017 முதல் |

**பிரதம மந்திரி/ பிரதம அமைச்சர்**

- இந்திய **அரசாங்கத்தின் தலைவர்** பிரதம மந்திரி.
- இங்கிலாந்து நாட்டு முறையைப் பின்பற்றி, இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரதம அமைச்சரின் தலைமையிலான நிர்வாக அமைப்பைத் தந்துள்ளது.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி தேர்தலில் வெற்றி பெற்று மக்களவையில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சித் தலைவரைப் பிரதம அமைச்சராக, குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.
- பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில் அவரது அமைச்சரவை நியமனம் செய்யப்படுகிறது.
- அமைச்சரவைக்கு தலைமை வகிக்கும் பிரதமர், தாம் விரும்பும் போது அமைச்சரவையை மாற்றியமைக்கலாம்.
- பிரதம அமைச்சர், அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்து, அவர்களின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.

- அரசின் நடவடிக்கைகளைப் பிரதமரின் தலைமையில் அமைந்த அமைச்சரவை நிறைவேற்றுகிறது. எனவே இவர் அரசியல் தலைவர் என போற்றப்படுகிறார்.
- பிரதம மந்திரி பதவிவழித் தலைவராக திட்டக் குழு, தேசிய வளர்ச்சிக் குழுமம், தேசிய ஒருமைப்பாட்டு குழுமம் மற்றும் மாநிலங்களுக்கிடைக் குழுமம் ஆகியவற்றில் செயல்படுகிறார்.
- அவசரகால நிலையை செயல்படுத்தக் கோரி எழுத்து மூலம் பரிந்துரை செய்யலாம்.
- மற்ற அமைச்சர்கள் பிரதமருக்கு நேரடிப் பொறுப்பு வாய்ந்தவர்கள் ஆவர்.
- குடியரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் முக்கிய தொடர்பாளர் பிரதமர்

**மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் (சரத்து – 73)**

**a)** நாடாளுமன்றம் சட்டம் இயற்ற அதிகாரம் கொண்ட விடயங்கள்.

**b)** ஒப்பந்தத்தின் விளைவாக, இந்திய அரசின் உரிமை, அதிகாரம் வரம்பு தொடர்பான விடயங்கள்

**இந்திய பிரதமர்கள்**

| வ.எண் | பெயர் | பதவிக்காலம் | கட்சி |
|---|---|---|---|
| 1. | ஜவஹர்லால் நேரு(1889-1964) | 17.8.1947-27.5.1964 | காங்கிரஸ் |
| 2. | குல்சாரிலால் நந்தா(1898-1998) | 27.5.1964-9.6.1964(acting) | காங்கிரஸ் |
| 3. | லால் பகதூர் சாஸ்திரி(1904-1966) | 9.6.1964-11.1.1966 | காங்கிரஸ் |
| 4. | குல்சாரிலால் நந்தா(1898-1998) | 11.1.1966-24.1.1966 | காங்கிரஸ் |
| 5. | இந்திரா காந்தி(1917-1984) | 24.1.1966-24.3.1977 | காங்கிரஸ் |
| 6. | மொரார்ஜி தேசாய்(1896-1995) | 24.3.1977-26.7.1979 | ஜனதா கட்சி |
| 7. | சரண்சிங்(1902-1987) | 28.7.1979-14.1.1980 | ஜனதா கட்சி |
| 8. | இந்திரா காந்தி(1917-1984) | 14.1.1980-31.10.1984 | காங்கிரஸ் |
| 9. | ராஜீவ் காந்தி(1944-1991) | 31.10.1984-2.12.1989 | காங்கிரஸ் |
| 10. | விஸ்வநாத் பிரதாப் சிங்(1931-2008) | 00.12.1989-10.11.1990 | ஜனதா தள் |
| 11. | சந்திரசேகர்(1927-2007) | 10.12.1990-21.05.1991 | ஜனதா தள் |
| 12. | பி.வி.நரசிம்மராவ்(1921-2004) | 21.6.1991-16.5.1996 | காங்கிரஸ் |

| | | | |
|---|---|---|---|
| 13 | அடல் பிகாரி வாஜ்பாய்(1924) | 16.5.1996-1.6.1996 | பாரதீயஜனதா |
| 14 | எச்.டி.தேவகௌடா(1933) | 1.6.1996-21.4.1997 | ஜனதா தள் |
| 15. | இந்திர்குமார் குஜரால்(1933) | 21.4.1997-19.3.1998 | ஜனதா தள் |
| 16. | அடல் பிகாரி வாஜ்பாய்(1924) | 19.3.1998-22.5.2004 | பாரதீய ஜனதா |
| 17. | டாக்டர் மன்மோகன் சிங்(1932) | 22.5.2004-26.5.2014 | காங்கிரஸ் |
| 18. | நரேந்திர மோதி(1950) | 26.5.2014 முதல் | பாரதீய ஜனதா |

**அமைச்சரவை (Council of Minister) (சரத்து – 74)**

- குடியரசுத் தலைவரின் நிருவாகப் பொறுப்புகள் பிரதமர் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்டு ஓர் அமைச்சரவை இந்திய குடியரசுத் தலைவருக்கு, உதவியும், ஆலோசனையும் அளிக்க இருத்தல் வேண்டும்.
- குடியரசுத் தலைவருக்கு அமைச்சர்களால் என்ன அலோசனை வழங்கப்பட்டது என நீதிமன்றம் விசாரிக்க முடியாது.

**கூட்டுப் பொறுப்பு (சரத்து- 75)**

- அமைச்சரவை மக்களவைக்கு கூட்டுப் பொறுப்பு உள்ளது(Collective Responsibility)
- ஒவ்வொரு அமைச்சருக்கும் தனது இலாகாவின் செயல்களுக்கு நாடாளுமன்றத்திற்கு தனிப்பட்ட பொறுப்புடையவர்.
- குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையில் பேரில் செயல்பட வேண்டும்.
- அமைச்சர்களைப் பிரதமரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
- பிரதம மந்திரி உள்ளிட்ட அமைச்சரவையின் எண்ணிக்கை மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது என 2003 ம் ஆண்டு 91 ஆவது சட்டத்திருத்தத்தின் படி மாற்றப்பட்டது(இது 1.1.2004 முதல் அமலுக்கு வந்தது.)

**அமைச்சர்கள்**

- குடியரசுத் தலைவர் விரும்பும் வரை அமைச்சர்கள் அப்பதவியில் நீடிக்கலாம்.
- அமைச்சராக பதவி ஏற்கும் ஒருவருக்கு குடியரசுத் தலைவர் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.
- நாடாளுமன்ற அவையின் உறுப்பினராக இல்லாத ஒருவர் 6 மாதங்கள் வரை அமைச்சராக பதவியில் இருக்கலாம்.
- அமைச்சர்களின் ஊதியம் மற்றும் பிற கொடுப்பனவுகளை (allowances) நாடாளுமன்றம் அவ்வப்போது சட்டம் இயற்றி நிர்ணயம் செய்யலாம்.
- பிரதமரின் ஆலோசனைப்படி மீன்று வகையான தகுதிகளில் அமைச்சர்கள் நியமிக்கப் படுகின்றனர்.
    1. கேபினேட் அல்லது அமைச்சரவை அமைச்சர்கள்
    2. ராஜாங்க அமைச்சர்கள் (Minister of State)
    3. இணை/ உதவி அமைச்சர்கள்.

**கேபினெட் அமைச்சர்கள்**

- கேபினெட் அமைச்சர்கள் அரசின் கொள்கைகளை வகுப்பவர்களாகவும், அரசின் பல்வேறு துறைகளைத் தலைமையேற்று நடத்துபவர்களாகவும் திகழ்கின்றனர்.
- அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட அரசுத் துரைகளின் தலைமை நிருவாகிகளாக இருக்கின்றனர்.
- முக்கியமான துறைகளான நிதி, உள்நாட்டு விவகாரம், வெளிநாட்டு விவகாரம், இரயில் போக்குவரத்து போன்றவற்றை இவர்களின் பொறுப்பில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ராஜாங்க அமைச்சர்கள்**

- ராஜாங்க அமைச்சர்கள் பல்வேறு துறைகள் அல்லது இலாக்காக்களுக்கு பொறுப்பாளராகத் திகழ்கின்றனர்.
- இவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டாலொழிய கேபினெட் கூட்டங்களில் கலந்துகொள்ள முடியாது.

**இணை/ உதவி அமைச்சர்கள்**

இவர்கள் கேபினெட் மற்றும் ராஜாங்க அமைச்சர்களுக்கு உதவியாக அமைச்சகங்களில் செயல்படுகின்றனர்.

**பிரதம மந்திரியின் கடமைகள்: (சரத்து – 78)**

- மத்திய அரசின் அமைச்சரவையின் அனைத்து முடிவுகள் மற்றும் சட்ட வரைவு குறித்த அனைத்தையும் குடியரசுத் தலைவரிடம் தொடர்புகொள்ள வேண்டும்.
- மத்திய அரசின் அமைச்சரவையின் அனைத்து முடிவுகள் மற்றும் சட்ட வரைவு குறித்த அனைத்தையும் கேட்கும் போது கூறவேண்டும்.
- ஒரு அமைச்சர் எடுத்த முடிவை அமைச்சரவைக்கு தெரியவில்லை எனக் குடியரசுத் தலைவர் கருதினால், அதை அமைச்சரவையின் பார்வைக்கு வைக்க வேண்டும்.

**இந்திய அரசு செயல்கள் (சரத்து-77)**

- இந்திய அரசின் நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் குடியரசுத் தலைவர் பெயரில் எடுக்கப்பட வேண்டும்.
- குடியரசுத் தலைவரின் பெயரில் பிறப்பிக்கப்படும் மற்றும் செயல்படுத்தப்படும் ஆணைகள் குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- இந்திய அரசின் நடவடிக்கை வசதிக்காக மற்றும் அதனை அமைச்சர்களுக்கு ஒதுக்க, குடியரசுத் தலைவர் விதிகளை உருவாக்க வேண்டும்.

**இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர்**

**(Attorney- General of India) (சரத்து - 76)**

- உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கத் தகுதியுடைய ஒருவரை இந்திய அரசின் தலைமை வழக்குரைஞராகக் குடியரசுத் தலைவர் அமர்த்துவார்.

**இவரது பணிகள்**

1. குடியரசுத் தலைவரால் வினவப்படும் சட்ட சம்பந்தமான வினாக்களில் இந்திய அரசுக்கு அறிவுரை வழங்குதல்.
2. சட்டத்தன்மை கொண்ட கடமைகளைப் புரிதல்.

3. அரசியலமைப்பின்படி பிற சட்டங்கள் வாயிலாக உள்ள கடமைகளைப் புரிதல்.
4. அவரது கடமைகளை ஆற்றும் பொருட்டு இந்தியாவில் உள்ள எல்லா நீதிமன்றத்திலும் ஆஜராகலாம்.
5. நாடாளுமன்றத்தின் எந்த ஒரு அவையிலும் பேசவோ, கலந்து கொள்ளவோ உரிமை பெற்றவர். ஆனால் ஓட்டுரிமை கிடையாது.
6. அவரது பதவிக்காலம் மற்றும் ஊதியத்தை நிர்ணயம் செய்வது குடியரசுத் தலைவர்.
7. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சிறப்புரிமைகள் மற்றும் பாதுகாப்புகளை பெற இவருக்கும் உரிமை உண்டு.

- இந்திய அரசாங்கத்திற்கு எதிரான வழக்குகளில் இவர் ஆஜராகவோ அல்லது ஆலோசனை வழங்கவோ கூடாது.
- எந்த ஒரு நிறுவனத்திலும் இயக்குனராகப் பொறுப்பேற்கக் கூடாது.

**நாடாளுமன்றம் (Parliament) (சரத்து - 79)**

நாடாளுமன்றம் என்பது குடியரசுத் தலைவர், மாநிலங்களவை/ இராஜ்யசபா(Council of States), மக்களவை/ லோக்சபா (House of the people) ஆகியவற்றை உள்ளடக்கியது.

லோக்சபா என்பது நாடாளுமன்றத்தின் கீழவை அல்லது மக்களவை என அழைக்கப்படுகிறது. இதன் உறுப்பினர்கள் (வயது வந்தோர் வாக்குரிமையின்படி) மக்களால் தேர்தல் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஆகியன பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தேர்தலில் அதிக வாக்குகள் பெற்றவரே அந்தத்தொகுதியின் உறுப்பினராவார்.

**மாநிலங்களவை/ இராஜ்யசபா (சரத்து-80)**

- இது நாடாளுமன்றத்தின் மேலவை ஆகும்.
- மொத்த உறுபினர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 250 (238+12)

- இதில் 238 உறுப்பினர்கள் **மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களி**லிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- 12 உறுப்பினர்கள்(இலக்கியம், அறிவியல், கலை, விளையாட்டு, சமூக சேவைகளில் அனுபவம் உள்ளவர்கள்) **குடியரசுத் தலைவரால் நியமனம்** செய்யப்படுகிறார்கள்.

**தேர்தல்**

- மாநில சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்களை ஒற்றைமாற்று வாக்குமுறை மூலம் தேர்தெடுக்கின்றனர். இது மறைமுக தேர்தல் என்று அழைக்கப்படுகிறது.
- ஒவ்வொரு மாநிலத்தின் மக்கள்தொகையின் எண்ணிக்கைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ராஜ்ய சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகிறது.
- யூனியன் பிரதேடங்களின் பிரதிநிதிகளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதை கூறும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது.

**பதவிக்காலம்**

- மாநிலங்களவை ஒரு நிரந்தர அவை. இதனைக் கலைக்க முடியாது.
- மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும். ஆனால் இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர்(1/3) ஒவ்வொரு இரண்டு ஆண்டுக்குப் பிறகு ஓய்வு பெறுகின்றனர். (சரத்து-83)
- மாநிலங்களவையின் உறுப்பினர்கள் ஒவ்வொரு மாநில சட்டப்பேரவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் விகிதப் பிரதிநிதித்துவ முறையில் ஒற்றை மாற்று ஓட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.(மறைமுகமாக).

**மாநிலங்களவை உறுப்பினராவதற்கான தகுதிகள்(சரத்து-84)**

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 30 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- நாடாளுமன்றத் தொகுதியில் வாக்களராகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

- மத்திய மாநில அரசு ஊழியராக இருத்தல் கூடாது.
- மக்களவை உறுப்பினராக இருக்கக் கூடாது.
- மனநிலை சரியில்லாதவராகவோ அல்லது பெற்றக் கடனை திருப்பித்தர இயலாதவராகவோ இருத்தல் கூடாது.
- குற்ற வழக்கில் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றிருத்தல் கூடாது.

**மக்களவை (சரத்து – 81)**

- மக்களவையின் மொத்த உறுப்பினர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 552(530+20+2) ஆகும்.
- இதில் 530 உறுப்பினர்கள் மாநிலங்களின் நாடாளுமன்ற தொகுதியிலிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- 20 உறுப்பினர்கள் யூனியன் பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- 2 ஆங்கிலோ-இந்தியன்(தந்தை ஆங்கிலேயர்- தாய் இந்தியர்) உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- தற்போது நம் நாடாளுமன்றத்தில் 2 ஆங்கிலோ-இந்திய நியமன உறுப்பினர்களை உள்ளடக்கி 545 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- மக்களவை உறுப்பினர்கள் மக்கள்தொகையின் அடிப்படையில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மக்களவை தொகுதி மறுசீரமைப்பு 2001 ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி உள்ளது.
- மக்களவைத் தொகுதிகளை மாற்றியமைக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது.
- மக்களவை உறுப்பினர்களின்/மக்களவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்.
- நெருக்கடி நிலை காலத்தில் இதன் பதவிக்காலத்தை ஓராண்டு நீடிக்கலாம்.
- பிரதம மந்திரியின் பரிந்துரையின் அடிப்படையிலோ அல்லது எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத நிலையிலோ குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைக்கலாம்.
- மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதால், மாநிலங்களவை உறுப்பினர்களை விட இவர்களுக்கு அதிக அதிகாரங்கள் உண்டு, நிதி மசோதாக்கள் மக்களவையில் மட்டுமே கொண்டு

வரமுடியும். அமைச்சர்கள் அனைவரும் கூட்டாகவும், தனித்தனியாகவும் மக்களவைக்கு பொறுப்புடையவர்கள்.

**மக்களவை உறுப்பினராவதற்கான தகுதிகள்(சரத்து -84)**

1. இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
2. 25 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
3. குற்ற வழக்கில் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றிருத்தல் கூடாது.
4. மத்திய மாநில அரசுப் பணியில் சம்பளம் பெறுபவராக இருக்கக் கூடாது.
5. மனவளர்ச்சி குறைந்தவர்களும். பெற்ற கடனைத் திருப்பித்தர முடியாதவர்களும் போட்டியிட முடியாது.

**நாடாளுமன்ற கூட்டம், நீட்டிப்பு, கலைப்பு (சரத்து-85)**

- நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கூட்டும், நாடாளுமன்ற அவைகளை அல்லது ஏதேனும் ஒரு அவையை நீட்டிக்கும், அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் உள்ளது.
- ஒரு கூட்டத் தொடருக்கும் அடுத்த கூட்டத்திற்கும் இடைவெளி 6 மாதங்களுக்கு மேல் இருக்கக் கூடாது.
- மக்களவையை கலைக்கும் அதிகாரம் குடியரசுத்தலைவரிடம் உள்ளது.

ஒரு வருடத்தில் நாடாளுமன்றம் 3 முறை கூடும்.

**சரத்து – 86**

- நாடாளுமன்றத்தின் அவைகளில் உரை நிகழ்த்தவும், தகவல் அனுப்பவும் குடியரசுத் தலைவருக்கு உரிமை உள்ளது.

**குடியரசுத் தலைவர் உரை (சரத்து-87)**

- பொதுத் தேர்தல் முடிந்தவுடன் நடக்கும் முதல் கூட்டத்திலும், ஒவ்வொரு வருடத்தின் முதல் கூட்டத்திலும் குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்துவார்.

**சரத்து – 88**

- ஒவ்வொரு அமைச்சரும், இந்தியத் தலைமை வழக்குரைஞரும் நாடாளுமன்ற நடவடிக்கைகளில், நாடாளுமன்ற கூட்டுக் கூட்டங்களில் பங்கெடுக்கவும் பேசுவதற்கும் உரிமை உண்டு ஆனால் வாக்களிக்க முடியாது.

**மாநிலங்களவைத் தலைவர் & துணைத் தலைவர்**

**சரத்து - 89**

- குடியரசுத் துணைத் தலைவர் பதவி வழி முறையில் மாநிலங்களவையின் தலைவராக செயல்படுவார்.
- மாநிலங்களவைத் துணைத் தலைவர் மாநிலங்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**சரத்து - 90**

- மாநிலங்களவை உறுப்பினர் தகுதி இழந்தால் துணைத் தலைவர் பதவி காலி ஆகிவிடும்.
- மாநிலங்களவைத் துணைத் தலைவர் தனது பதவி விலகல் கடிதத்தை மாநிலங்களவைத் தலைவரிடம் கொடுக்கப்பட வேண்டும்.
- மாநிலங்களவை துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமெனில் 14 நாட்களுக்கு குறையாத அறிவிக்கை கொடுத்து மாநிலங்களவையின் தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்யலாம்.

**சரத்து – 91**

- மாநிலங்களவைத் தலைவர் பதவி காலியாக உள்ளபோதோ அல்லது குடியரசுத் துணைத் தலைவர், குடியரசுத் தலைவராக செயல்படும் போதும் மாநிலங்களவைத் தலைவரின் பணிகளை துணைத்தலைவர் மேற்கொள்வார்
- துணைத் தலைவர் பதவியும் காலியாக இருந்தால், அந்த அவையின் வேறு ஒரு உறுப்பினரை தலைவராக செயல்பட குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- மாநிலங்களவைத் தலைவர் இல்லாத நேரங்களில், துணைத் தலைவர் செயல்படுவார். துணைத் தலைவரும் இல்லாத நேரங்களில் சபையின் நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்படும் நபர்

அவையை நடத்துவார். அந்த நபரும் இல்லையெனில் மாநிலங்களவை தீர்மானிக்கும் வேறொரு நபர் தலைவராக செயல்படுவார்.

**சரத்து – 92**

- குடியரசுத் துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கவனிப்பில் இருந்தால் குடியரசுத் துணைத் தலைவர் அவையினை தலைமையேற்று நடத்தக் கூடாது.
- துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கவனிப்பில் இருந்தால் துணைத் தலைவர் அவையினை தலைமையேற்று நடத்தக் கூடாது.
- குடியரசுத் துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கவனிப்பில் உள்ளபோது குடியரசுத் துணைத்தலைவர் அவையில் பேசுவதற்கும், பங்கெடுப்பதற்கு உரிமை உண்டு ஆனால் வாக்களிக்க முடியாது.

**மக்களவை சபாநாயகர் / துணை சபாநாயகர்**

**சரத்து - 93**

- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகியோரை மக்களவை உறுப்பினர்கள் தங்களுள் இருவரை தேர்ந்தெடுக்கிறார்கள்.

**சரத்து – 94**

- மக்களவையின் உறுப்பினர் பதவியை இழந்தால் அவரின் சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர் பதவியியும் பறி போய்விடும்.
- சபாநாயகர் தனது பதவி விலகல் கடிதத்தை துணை சபாநாயகரிடம் கொடுக்க வேண்டும்.
- துணை சபாநாயகர் தனது பதவி விலகல் கடிதத்தை சபாநாயகரிடம் கொடுக்க வேண்டும்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகியோரை 14 நாட்களுக்கு குறையாத அறிவிக்கை ஒன்றினை கொடுத்து மக்களவையின் தீர்மானம் மூலம் பதவி நீக்கம் செய்ய வேண்டும்.
- மக்களவை கலைக்கப்பட்டால் சபாநாயகர் பதவி காலியாகாது. அடுத்த அவை கூடும் வரை அப்பதவியில் நீடிக்கலாம்.

**சரத்து – 95**

- சபாநாயகர் பதவி காலியாக இருக்கும் போது அப்பணியை துணை சபாநாயகர் ஆற்றுவார்.
- துணை சபாநாயகர் பதவியும் காலியாக இருந்தால் மக்களவை உறுப்பினர்களில் ஒருவரை குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் வருகை தரவில்லையென்றால் அவை விதிகளின்ப்டி நியமனம் செய்யலாம்.

**சரத்து** - 96

- சபாநாயகரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கவனிப்பில் இருக்கும் போது சபாநாயகரும், துணை சபாநாயகரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கவனிப்பில் இருக்கும் போது துணை சபாநாயகரும் அவையினை தலைமையேற்று நடத்துதல் கூடாது. ஆனால் அவையில் பேசுவதற்கும், கலந்து கொள்வதற்கும் உரிமை உண்டு. வாக்கெடுப்பில் வாக்களிக்கலாம்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஊதியங்கள், படித்தொகைகள் மற்றும் சிறப்புரிமைகளை நாடாளுமன்றம் நிர்ணயிக்கும். (சரத்து-97)
- நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் தனித்தனி செயலகங்கள் இருத்தல் வேண்டும். (சரத்து - 98)
- நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒவ்வொரு உறுப்பினர்களும் குடியரசுத் தலைவர் அல்லது அவர் சார்பாக நியமிக்கப்படும் ஒருவர் (தற்காலிக சபாநாயகர்) முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.(சரத்து -99)
- அவையின் மூத்த உறுப்பினர் (அவையின் உறுப்பினர் வயது) தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்படுகிறார்.

**சரத்து** – 100

- நாடாளுமன்ற அவைகளில் எழும் எல்லா கேள்விகளும் பெரும்பான்மை வாக்கெடுப்பின் மூலம் நிர்ணயிக்கப்படும்.
- சபாநாயகர் முதல் வாக்கெடுப்பில் வாக்களித்தல் கூடாது. ஆனால் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்படின் வாக்களிக்கலாம்.

- கூட்டம் நடத்த (Quorum) பத்தில் ஒரு பங்கு (1/10) உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.
- கூட்டம் நடக்கும்போது, குறைந்தபட்ச உறுப்பினர்கள் இல்லாத போது தலைவர் அல்லது சபாநாயகர் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டும் அல்லது இடைநிறுத்த வேண்டும்.

**சரத்து – 101**

- ஒருவர் நாடாளுமன்றத்தின் ஒரு அவை மற்றும் சட்டமன்ற அவையில் உறுப்பினராக இருந்தால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி காலியாகி விடும்.
- நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் தங்களது பதவிவிலகல் கடிதத்தினை சபாநாயகரிடமும் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தால் மாநிலங்களைவைத் தலைவரிடமும் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் பதவிவிலகல் கடிதம் தன்னிச்சையாகவோ, நியாயமானதாகவோ இல்லையென்று நினைத்தால் ஏற்றுக்கொள்ள மறுக்கலாம்.
- நாடாளுமன்ற அவையில், அவையின் அனுமதி இல்லாமல் தொடர்ந்து 60 நாட்கள் வருகை தராமல் இருந்தால் அவரது உறுப்பினர் பதவி காலியாகிவிடும்.(ஆனால் கூட்டத்தொடரில் 4 நாட்களுக்கு தொடர்ந்து ஒத்தி வைக்கப்பட்டால் அந்நாட்கள் 60 நாட்களுக்குள் கணக்கில் வராது).

**மக்களவை சபாநாயகர்கள்**

| | **பெயர்** | **பதவிக்காலம்** |
|---|---|---|
| 1. | ஜி.வி.மவலான்கர் | 15.5.1952 முதல் 27.2.19564 |
| 2. | எம்.ஏ.அய்யங்கார் | 8.3.1956 முதல் 16.4.1962 |
| 3. | ஹீகம்சிங் | 17.4.1962 முதல் 16.3.1967 |
| 4. | என். சஞ்சிவ ரெட்டி | 17.3.1967 முதல் 19.7.1969<br>26.3.1977 முதல் 13.7.1977 |
| 5. | ஜி.எஸ்.தில்லான் | 8.8.1969 முதல் 17.3.1971<br>22.3.1971 முதல் 1.12.1975 |
| 6 | மாலி ராம் பகத் | 15.1.1976 முதல் 25.3.1977 |
| 7 | கே.எஸ்.ஹெட்கர் | 21.7.1977 முதல் 21.1.1980 |

| | | |
|---|---|---|
| 8 | பல்ராம் ஜாக்கர் | 22.1.1980 முதல் 15.1.1985<br>16.1.1985 முதல் 18.12.1989 |
| 9 | ரபிராய் | 19.12.1989 முதல் 9.7.1991 |
| 10 | சிவராஜ் பி.பாட்டில் | 10.7.1991 முதல் 22.5.1996 |
| 11 | பி.ஏ.சங்மா | 23.5.1996 முதல் 23.3.1998 |
| 12 | ஜி.எம்.சி. பாலயோகி | 24.3.1998 முதல் 19.10.1999<br>22.10.1999 முதல் 3.3.2002 |
| 13. | மனோகர் ஜோசி | 10.5.2002 முதல் 2.6.2004 |
| 14 | சோம்நாத் சட்டர்ஜி | 4.6.2004 முதல் 31.5.2009 |
| 15 | மீரா குமார் | 1.6.2009 முதல் 6.5.2014 |
| 16 | சுமித்ரா மகாஜன் | 6.5.2014 முதல் 29.5.2019 |
| 17 | ஓம் பிர்லா | 19.6.2019 - |

**உறுப்பினர்களின் தகுதியின்மை / தகுதியிழப்பு (சரத்து - 102)**

1. மத்திய அரசு அல்லது மாநில அரசின் கீழ் ஆதாயம் தரும் பதவிகள் எதனையும் வகித்தல் கூடாது.
2. தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் மனநிலை சரியில்லாதவர்கள் என விளம்பப்பட்டவர்கள்.
3. கடன் தீர்க்க இயலாதவராக அறிவிக்கப்பட்டவர்.
4. இந்தியக் குடிமகனாக இல்லாதவர் அல்லது தாமே விரும்பி பிற நாட்டின் குடியுரிமை பெற்றவர்கள்.
5. நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டவர்.

- மத்திய அல்லது மாநில அரசுகளில் அமைச்சர்களாக இருப்பவர்கள் ஆதாயம் தரும் பதவி வகிப்பதாக கருதப்பட மாட்டார்கள்.
- **பத்தாவது அட்டவணை**யின்படி தகுதியின்மை அடைந்தால் உறுப்பினராக இருப்பதற்கும் தகுதி இழந்து விடுவார்.
- கட்சித் தாவல் சட்டத்தின்படி தகுதியின்மை செய்யும் அதிகாரம் சபாநாயகரிடம் உள்ளது.

- கட்சித் தாவல் சட்டம் தவிர **பிற சூழல்களில்** தகுதியின்மை பற்றி முடிவு செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் உள்ளது. ஆனால் அவ்வாறு செய்வதற்கு முன் தேர்தல் ஆணையத்தின் கருத்தினைக் கேட்டு அதன்படி செயல்பட வேண்டும். (சரத்து-103)

**சரத்து – 104**

- பதவிப்பிரமாணம் எடுக்காமல் அல்லது தகுதி இல்லாமல் அல்லது தகுதியின்மைக்குப் பிறகு அவையில் பங்கெடுப்பது அல்லது வாஅக்களித்தால் ஒருநாளுக்கு 500 ரூபாய் என அபராதம் செலுத்த பொறுப்புடையவராவார்.

**நாடாளுமன்ற அவைகள் மற்றும் அதன் உறுப்பினர்கள், குழுக்களின் அதிகாரங்கள், சலுகைகள்(சரத்து-105)**

- நாடாளுமன்றத்தில் பேச்சுரிமை உள்ளது.
- நாடாளுமன்ற உறுப்பினர் தான் சொன்ன அல்லது வாக்களித்தல், வெளியீடுகள், அறிக்கைகள், நடவடிக்கைகள் போன்ற, வேறு ஏதேனும் செயல்களுக்கு எந்த நீதிமன்றத்திற்கும் கடமைப்பட்டவர் அல்ல.

**சரத்து -108**

- நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் சலுகைகள் நாடாளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

**அறிமுகம் மற்றும் நிறைவேற்றல்/ மசோதாக்களின் நிலை (சரத்து-107)**

பண மசோதா மற்றும் இதர நிதி மசோதாக்களைத்(Other financial bills) தவிர சாதாரண மசோதக்களை நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் எந்தவொரு அவையிலும் அறிமுகப்படுத்தலாம்.

- நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையில் நிலுவையிலிருக்கும் மசோதா அந்த அவை ஒத்தி வைக்கப்பட்டால் (Prorogue) காலாவதி ஆகிவிடாது.
- மாநிலங்களவையில் நிலுவையில் உள்ள ஒரு மசோதா, மக்களவையில் நிறைவேற்றப்படாத நிலையில் மக்களவை கலைக்கப்பட்டால் அந்த மசோதா காலாவதி ஆகாது.

- ஒரு மசோதா மக்களவையில் நிலுவையில் உள்ள போது அல்லது மக்களவையில்நிறைவேற்றப்பட்டு மாநிலங்களவையில் நிலுவையில் உள்ளபோது மக்களவை கலைக்கப்பட்டால் காலாவதி ஆகிவிடும்.

**நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டு அமர்வு**

**(Joint Sitting of Both houses) (சரத்து-108)**

கீழ்வரும் ஏதேனும் ஒரு **சூழ்நிலையில் கூட்டு அமர்வு** கூட்டலாம்.

a) ஒரு மசோதா மற்றொரு அவையால் நிராகரிக்கப்பட்டால்.

b) ஒரு மசோதாவில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களை இரு அவைகளும் ஒத்துப்போக முடியவில்லையென்றால்

c) அம்மசோதாவை மற்றொரு அவை பெற்ற பிறகு ஆறு மாதங்கள் ஆகியும், அதனை நிறைவேற்றாமல் இருந்தால்,

(ஆறு மாதங்களை கணக்கிட, அவை தொடர்ந்து 4 நாட்களுக்கு தொடர்ந்து ஒத்தி வைக்கப்பட்டால் கணக்கில் வராது.)

- இரு அவைகளின் உறுப்பினர்களின் பெரும்பான்மையோர் அம்மசோதாவை ஆதரித்தால் அது இரு அவைகளிலும் நிறைவேற்றியதாகக் கருதப்படும்.
- குடியரசுத் தலைவர் இரண்டு அவைகளின் கூட்டு அமர்விற்கு அழைப்பு விடுப்பார்.
- நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டு அமர்விற்கு தலைமை ஏற்று நடத்துவது சபாநாயகர் ஆவார்.
- பண மசோதாவிற்கு கூட்டு அமர்வு கூட்ட முடியாது.

**பண மசோதா (Money bill) (சரத்து- 109)**

- பண மசோதா மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தல் கூடாது.
- பண மசோதா, குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்குப் பிறகு மக்களவையில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

- பண மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்ட பிறகு மாநிலங்களவைக்கு அதன் பரிந்துரைகளுக்காக செல்லும், அதனை பெற்ற **14 நாட்களுக்குள்** தனது பரிந்துரைகளோடு திருப்பி அனுப்ப வேண்டும். அந்த பரிந்துரைகளை மக்களவை ஏற்கலாம் அல்லது மறுக்கலாம்.
- ஒரு பண மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டு மாநிலங்களவையின் பரிந்துரைகளுக்காக அனுப்பப்படும் போது அதனை பரிந்துரைகளுடன் 14 நாட்களுக்குள் மக்களவைக்கு அனுப்பி வைக்காவிட்டால், அந்த 14 நாட்கள் முடிவுற்றவுடன் மேற்படி பண மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்.

**பண மசோதா – வரையறை(சரத்து-110)**

- பண மசோதாவை வரையறுத்துக் கூறும் சரத்து-110.
  - **a)** எந்த வரியின் விதிப்பும், ஒழிப்பும், குறைப்பு, மாற்றல், ஒழுங்குபடுத்தல்.
  - **b)** பணம் வாங்குவதைல் ஒழுங்குமுறை அல்லது இந்திய அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட பொறுப்புறுதி ஏதேனும்.
  - **c)** திரட்டு நிதி (Consolidate Fund) அல்லது நிகழ்வு சார் நிதி (Contingency Fund) பணத்தை கொடுத்தல் அல்லது எடுத்தல்.
  - **d)** இந்தியத் திரட்டு நிதியிலிருந்து பணம் ஒதுக்குதல்.
  - **e)** இந்தியத் திரட்டு நிதியிலிருந்து ஈடுகட்டப்படும் என செலவினத்தை அறிவித்தல்.
  - **f)** இந்தியத் திரட்டு நிதிக் கணக்கில் அல்லது இந்தியாவின் பொதுக் கணக்கில் பணத்தை பெற்றுக் கொள்ளல் அல்லது அந்தப் பணத்தின் பாதுகாப்பு அல்லது வெளியீடு அல்லது மத்திய அல்லது மாநில அரசினுடைய கணக்குகளைத் தணிக்கை செய்தல்.
  - **g)** மேற்கண்ட விடயங்கள் தொடர்பானவைகள்

**பின்வருவனவைகள் பண மசோதா ஆகாது**

1. அபராதங்கள் அல்லது பணத்தொடர்பான தண்டனைத் தொகைகள் விதிப்பு.
2. உரிமத்திற்கான கட்டணம் செலுத்துதல் அல்லது சேவைக்கான கட்டணம் செலுத்துதல்.

3. உள்ளூர் அதிகார அமைப்பால் அல்லது உள்ளூர் நோக்கங்களுக்காக உண்டாக்கப்பட்ட அமைப்பினால் விதிக்கப்பட்ட, ஒழிக்கப்பட்ட, குறைக்கப்பட்ட, மாற்றப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வரி.

- ஒவ்வொரு பண மசோதாவும், மாநிலங்களவைக்கு அனுப்பும்போது, அல்லது ஒப்புதலுக்காக குடியரசுத் தலைவருக்கு அனுப்பும்போது, இது "பண மசோதா"என சபாநாயகரால் மேற்குறிப்பிட்டு கையொப்பம் இட வேண்டும்.
- ஒரு மசோதா பண மசோதாவா இல்லையா என வினா எழுந்தால் அதனை முடிவு செய்வது மக்களவை **சபாநாயகர்** ஆவார். அவரது முடிவே இறுதியானது.

**மசோதாக்களுக்கு இசைவு (சரத்து - 111)**

- நாடாளுமன்ற இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்ட மசோதா குடியரசுத் தலைவரின் இசைவினை பெற்று சட்டமாகிறது.
- இசைவிற்கு வரும் மசோதாக்களை குடியரசுத் தலைவர் தனது இசைவினை அளிக்கலாம் அல்லது நிறுத்து வைக்கலாம் அல்லது பண மசோதா தவிர சாதாரண மசோதாக்களில் மறு பரிசீலனை செய்ய ஒருமுறை திருப்பி அனுப்பலாம்.
- திருப்பி அனுப்பப்பட்ட மசோதாவை "அவைகள்" மீண்டும் கவனித்து, திருத்தங்களுடன் அல்லது திருத்தங்கள் இல்லாமல் இசைவிற்காக மீண்டும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினால், அதை நிறுத்தி வைக்க இயலாது.

**ஆண்டு நிதிநிலை அறிக்கை (சரத்து - 112)**

- ஆண்டு நிதிநிலை அறிக்கை ஒரு பண மசோதா.
- குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்குப் பிறகு தாக்கல் செய்யப்படும் ஆண்டு நிதிநிலை அறிக்கை மக்களவையில் அறிமுகப்படுத்தப்படும்.
- ஆண்டு நிதிநிலை அறிக்கையினை நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் சமர்ப்பிக்கச் செய்வது குடியரசுத் தலைவரின் கடமையாகும்.

- இவ்வறிக்கையானது வரவிருக்கும் நிதி ஆண்டின் திட்டமிடப்பட்ட வருமானம் (Estimated receipts/ income) மற்றும் செலவினங்களைக் குறித்த விபரங்களைத் தருகிறது.
- திட்டமிடப்பட்ட செலவினங்கள் இரு வகைப்படும்.

1. இந்தியத் திரட்டு நிதியிலிருந்து(CFI) செய்யப்பட/ விதிக்கப்பட வேண்டிய செலவினங்கள்.
2. இந்தியத் திரட்டு நிதியிலிருந்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பிற செலவினங்கள்.

    - இந்திய திரட்டு நிதியிலிருந்து நாடாளுமன்ற வாக்கெடுப்பு இல்லாமல் செய்யக்கூடிய செலவினங்கள்/ செலவிடத்தக்க செலவினங்கள்.

    1. இந்தியக் குடியரசுத் தலைவரின் ஊதியம் மற்றும் படிகள், அவரது அலுவலகம் தொடர்பான செலவினங்கள்
    2. மாநிலங்களவைத் தலைவர், மற்றும் துணைத் தலைவர்(Vice-Chairman), மக்களவை சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகியோரின் ஊதியம் மற்றும் படிகள்
    3. இந்திய அரசின் கடன் பொறுப்புகள்
    4. உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம், படிகள் மற்றும் ஓய்வு ஊதியம், கூட்டாட்சி நீதிமன்ற நீதிபதிகலின் ஓய்வு ஊதியம், அரசியலமைப்பு அமலுக்கு வருவதற்கு முன்பிருந்த உயர்நீதிமன்றநீதிபதிகளின் ஓய்வு ஊதியம்.
    5. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் ஊதியம், படிகள் மற்றும் ஓய்வு ஊதியம்.
    6. நீதிமன்றம் அல்லது இசைவுத் தீர்ப்பாயம் ஏதேனும் வழங்கிய தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது முடிவின்படி செலுத்தப்பட வேண்டிய தொகை.

    அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நாடாளுமன்றச் சட்டம் அறிவிக்கும் பிற செலவினங்கள்.

**சரத்து-113**

- வாக்கெடுப்பிற்கு உட்படாத செலவினங்கள் தொடர்பான விடயங்கள் நாடாளுமன்ற அவைகளில் விவாதிக்க மட்டுமே இயலும்.

- பிற செலவினங்கள் தொடர்பானவைகள் மானியக் கோரிக்கைகளாக மக்களவையில் தாக்கல் செய்யப்படும். அதனை மக்களவை ஒப்புதல் அளிக்காமல், மறுக்கலாம், குறைக்கலாம்.
- குடியரசுத் தலைவரின் பரிந்துரை இல்லாமல் மானியக் கோரிக்கைகளை வைக்க முடியாது.

**பணம் ஒதுக்கு மசோதாக்கள்(Appropriation Bills) (சரத்து-114)**

- மானியக் கோரிக்கைகள் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு பண ஒதுக்கு மசோதா அறிமுகப்படுத்தப்படும்.
- பண ஒதுக்கு மசோதாவில் ஓட்டெடுப்பிற்கு உள்ளாகாத செலவினங்கள் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அளவிற்கு மிகக் கூடாது.
- பண ஒதுக்கு மசோதாவில் திருத்தம்கொள்ள முடியாது. ஆனால் விவாதிக்கலாம்.
- பண ஒதுக்கு மசோதா நிறைவேற்றாமல் இந்தியத் தொகுப்பு நிதியத்திலிருந்து பணம் எடுத்தல் கூடாது.

**துணை மானியம் (Supplementary Grant)(சரத்து -115)**

ஒரு குறிப்பிட்ட பணிக்கு நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதாக இல்லையெனில் ஒதுக்குவது.

**கூடுதல் மானியம் (Additonal Grant)**

ஒரு புதிய பணிக்கு தேவைப்படும் கூடுதல் செலவினங்களுக்காக ஒதுக்குவது.

**அதிகப்படியான மானியம் (Eccess Grant)**

ஏதேனும் ஒரு பணிக்கு அனுமதித்ததை விடக் கூடுதலாக செலவு செய்துவிட்டால் வழங்கப்படும் மானியம். இது மக்களவை வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படும். இதனை பொதுக் கணக்கு குழு (Public Account committee) அனுமதிக்க வேண்டும்.

**நிதி மசோதா (Financial Bills) (சரத்து - 117)**

- நிதி மசோதா அல்லது அதில் திருத்தம் போன்றவைகள் குடியரசுத் தலைவரின் பரிந்துரை இல்லாமல் அறிமுகம் செய்தல் கூடாது.
- நிதி மசோதா மாநிலங்களவையில் அறிமுகப்படுத்த முடியாது.

- ஒரு வரியினை (Tax) குறைப்பதற்கோ அல்லது நீக்குவதற்கோ குடியரசுத் தலைவரின் பரிந்துரை தேவையில்லை.

**நடைமுறை விதிகள் (சரத்து - 118)**

- நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையும் தங்களை முறைப்படுத்த விதிகளை வகுக்கலாம்.
- குடியரசுத் தலைவர், மாநிலங்களவைத் தலைவர் மற்றும் மக்களவை சபாநாயகர் ஆகியோரை ஆலோசனை செய்த பிறகு, கூட்டுக் கூட்டம் தொடர்பான, இரு அவைகளுக்கு இடையில் தொடர்பு கொள்வது தொடர்பான விடயங்களில் நடைமுறை விதிகள் வகுக்கலாம்.
- கூட்டுக் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்துவது சபாநாயகர் அவர் வருகை தராத போது நடைமுறை விதிகள் நிர்ணயிக்கும் நபர் நடத்துவார்.
- நிதி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றம் சட்டம் இயற்றி நெறிமுறைப்படுத்தலாம்.(சரத்து – 119)

**நாடாளுமன்றத்தில் பயன்படுத்தகூடிய மொழி (சரத்து - 120)**

- நாடாளுமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் இந்தி அல்லது ஆங்கில மொழியில் நடத்தல் வேண்டும்.
- ஆனால் இந்தி அல்லது ஆங்கிலத்தில் பேச இயலாத உறுப்பினர்களை மாநிலங்களவைத் தலைவர், சபாநாயகர், உறுப்பினர்களின் தாய்மொழியில் பேசுவதற்கு அனுமதிக்கலாம்.

**சரத்து – 122**

- நாடாளுமன்ற நடவடிக்கைகளின் செல்லுதன்மையை நடைமுறைகளின்படி நடத்தப்படவில்லை என வினா எழுப்பக் கூடாது.
- நாடாளுமன்ர உறுப்பினர் அல்லது அதிகாரி, நடைமுறைகளை ஒழுங்குபடுத்த தக்களுக்கு அச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை எந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள்ளும் வராது.

**நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

- நாடாளுமன்றம் மாநிலங்களவை, மக்களவை என இரு அவைகளைக் கொண்டது. எனவே இந்திய நாடாளுமன்றம் ஈரவை மன்ற முறையைச் சார்ந்தது.

- இதன் முக்கியமானப் பணி, சீரிய முறையில் ஆட்சி நடப்பதற்கான சட்டமியற்றுதல் ஆகும். நாட்டின் அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக இச்சட்டங்கள் இயற்றப்படுகிரது.
- நாடாளுமன்றம் நாட்டின் நிதிநிலைமைக்கு முழு பொறுப்பாகும். மைய வரவு செலவு திட்டங்களை தாக்கல் செய்வதும், வரி நிர்ணயம் செய்வதும், பல்வேறு அரசுத் துறைகளுக்கு நிதியைப் பகிர்ந்தளிப்பதும் அதன் பொறுப்பாகும்.
- அரசியலமைப்பு சட்டவிதிகளைத் திருத்தம் செய்வதும், குடியரசுத் தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர் அரசியலமைப்பு அதிகாரங்கள் மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்து குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தையும் நாடாளுமன்றம் பெற்றுள்ளது.
- எந்த ஒரு மாநிலத்தின் மீதும் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யவும் குடியரசுத் தலைவரை நாடாளுமன்றம் அனுமதிக்கிறது. அமைச்சரவையின் செயல்பாட்டினைக் கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும் கட்டுப்படுத்தவும் நாடாளுமன்றத்திற்கு உரிமை உள்ளது.

**உச்சநீதிமன்றம் (சரத்து-124)**

**நீதித்துறை**

- உச்ச்நீதிமன்றத்தை தலையாய நீதிமன்றமாகக் கொண்ட சுதந்திரமான, ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறையை அரசியலமைப்பு ஏற்படுத்தியுள்ளது.
- இந்த நீதித்துரை மத்திய, மாநில அரசுகளின் சட்டம் மற்றும் நிருவாகப் பிரிவுகளின் தலையீடுகளில்லாமல் சுதந்திரமாக இயங்குவதாகும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறை என்பது நாடு முழுவதும் பல அடுக்குகளிலுள்ள நீதிமன்றங்கள் அனைத்தும் ஒரே அமைப்பின் கீழ் செயல்படுவது என்று பொருள்படும்.
- இந்தியாவின் உச்சநீதிமன்றம், அனைத்து நீதிமன்றங்களும் தலைமையானது.
- இந்திய உச்சநீதிமன்றம் இந்திய அரசியல் ஆமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாக உள்ளது. குடிமக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் நீதித்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. அது மட்டுமின்றி, அரசியலமைப்பு விதிகளை விளக்குவதிலும், நிருவாக, சட்டமன்றத்

தலையீடுகளிலிருந்து அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பைப் பாதுக்காப்பதிலும், நீதித்துறை முக்கியப் பங்காற்றுகிறது.

**உச்சநீதிமன்றத்தின் அமைப்பு**

- 1950 ம் ஆண்டு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, உச்சநீதிமன்றத்தில், இந்தியத் தலைமை நீதிபதி மற்றும் 7 நீதிபதிகள் இடம் பெற்றிருந்தனர்.
- 1960 ல் 13 நீதிபதிகளாக உயர்ந்தப்பட்டது. பிறகு 1977 ல் 17 ஆக உயர்ந்தது. 1986 ல் 25 ஆக உயர்த்தப்பட்டது.
- உச்சநீதிமன்ற (நீதிபதிகள் எண்ணிக்கை) திருத்தச் சட்டம் 2008 ன் படி நீதிபதிகளின் எண்ணிக்கை 30 ஆக உயர்த்தப்பட்டது.
- தற்போது, ஒரு தலைமை நீதிபதி உட்பட 31 நீதிபதிகள் எண்ணிக்கை உச்சநீதிமன்றத்தில் உள்ளன.

**உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனம்**

- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உட்பட நீதிபதிகளை நியமிப்பது குடியரசுத் தலைவர்.
- நிரந்தர அடிப்படையில் நியமனம் செய்யப்படும் நீதிபதிகளைத் தவிர தற்காலிக அடிப்படையிலும் சில நீதிபதிகளை நியமனம் செய்வதற்கும் அரசியலமைப்பில் வாய்ப்பு தரப்பட்டுள்ளது.
- தலைமை நீதிபதி நியமனத்தின் போது மற்ற மூத்த நீதிபதிகள் அடங்கிய குழுவினை ஆலோசனை செய்து குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- மற்ற நீதிபதிகளை நியமிக்கும் போது இந்தியத் தலைமை நீதிபதியை ஆலோசித்தல் வேண்டும்.
- நீதிபதி தனது பதவி விலகல் கடிதத்தைக் குடியரசுத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.
- நீதிபதி ஒருவரை குடியரசுத் தலைவர் தனது உத்தரவு ஒன்றின் வாயிலாக நீக்கலாம், ஆனால் அந்த நீதிபதியின் மெய்ப்பிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது தகுதியின்மை குறித்து நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும், அந்த அவையின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினராலும் அந்த அவையின் உறுப்பினர்களில் வந்திருந்து வாக்களிப்பவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்குக் குறையாத பெரும்பான்மையினராலும் ஆதரிக்கப்பட்ட ஒரு வேண்டுரை ஒரே தோடர் அமர்வில் குடியரசுத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.

- நீதிபதிகளின் தகுதியின்மை, தவறான நடத்தை தொடர்பான சான்று மற்றும் புலனாய்வு போன்றவைகளை தாக்கல் செய்யும் நடைமுறைகளை நாடாளுமன்ரம் சட்டம் இயற்றி முறைப்படுத்தலாம்.

**உச்சநீதிமன்ற நீதிபதிகளின் தகுதிகள்**

1. இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்

மற்றும்

2. தொடர்ந்து குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் ஒரு உயர்நீதிமன்றத்திலோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உயர்நீதிமன்றங்களிலோ நீதிபதியாகப் பணியாற்றி இருத்தல் வேண்டும்.

அல்லது

3. குடியரசுத் தலைவரின் கருத்தின்படி ஒரு சிறந்த நீதி அறிஞராக இருத்தல் வேண்டும்.

- நீதிபதிகளுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பவர் குடியரசுத் தலைவர்.

**பதவிக்காலம்**

- உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும், பிற நீதிபதிகளும் 65 வயது நிறைவடையும் வரை பதவி வகிக்கலாம்.
- பதவிக்காலத்திற்கு முன்கூட்டியே தக்களது பதவி விலகலைக் குடியரசுத் தலைவரிடம் வழங்கலாம்.
- நாடாளுமன்ர குற்றச்சாட்டுகள் மூலம் பதவி நீக்கம் செய்யப்படலாம்.
- ஓய்வு பெற்ற பிறகு இந்தியப் பரப்பெல்லையில் உள்ள எந்த நீதிமன்றத்திலும் வழக்காடக் கூடாது.
- நீதிபதிகளின் ஊதியம் மற்றும் சலுகைகளை நிர்ணயிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது. ஆனால் அது பதவிக் காலத்தில் குறைத்தல் கூடாது.(சரத்து-125)
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பதவி காலியாக இருந்தாலோ அல்லது பணியாற்ற இயலாத நிலையில் இருந்தாலோ, குடியரசுத் தலைவர் வேறு ஒரு நீதிபதியைத் தலைமை நீதிபதியாக நியமிக்கலாம்.(சரத்து-126)

**சரத்து-127**

- உச்சநீதிமன்றத்தின் அமர்வினை நடத்த போதுமான நீதிபதிகள் இல்லாத நிலையில், இந்தியத் தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று மற்றும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை ஆலோசனை செய்து உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கத் தகுதியுடைய உயர்நீதிமன்ற நீதிபதியை குறிப்பிட்ட காலத்திற்கு உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்க எழுத்து மூலம் கேட்கலாம்.
- அவ்வாறு நியமிக்கப்பட்ட நீதிபதி அப்பணி முடியும் வரை உச்சநீதிமன்ற அமர்வில் பங்கேற்க வேண்டும். அந்தக் காலத்தில் உச்சநீதிமன்ற நீதிபதிக்குரிய அனைத்து அதிகார வரம்பு, அதிகாரம், சலுகைகள் உண்டு.

**சரத்து-128**

- ஓய்வுபெற்ற நீதிபதிகளை நியமிப்பது இந்தியத் தலைமை நீதிபதி.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, உச்சநீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி ஓய்வு பெற்ற ஒருவரை அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றிய, உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்க தகுதியுடைய ஒருவரை உச்சநீதிமன்ற நீதிபதியாக செயலாற்ற கேட்டுக் கொள்ளலாம்.
- அவ்வாறு செயல்படும்போது, குடியரசுத்தலைவரால் நிர்ணயிக்கப்படும் சலுகை, ஊதியம் பெறுவர். ஆனால் உச்சநீதிமன்ற நீதிபதியாகக் கருதப்பட மாட்டார். ஆனால், அவ்வாறு செயலாற்றக் கட்டாயப்படுத்த முடியாது.

**சரத்து-129**

- நீதிமன்ற அவமதிப்பிற்கு தண்டனை வழங்கும் அதிகாரம் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களும் உச்சநீதிமன்றத்திற்கு உண்டு.

**சரத்து-130**

- உச்சநீதிமன்றம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.
- குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன், இந்தியாவின் வேறு எந்த ஒரு பகுதியிலும் அமர்வுகளை நடத்தி முடிவெடுக்கும் அதிகாரம் இந்தியத் தலைமை நீதிபதிக்கு உண்டு.

**இந்திய அரசியலமைப்பு(99-வது திருத்தம்) சட்டம் 2014**

- அரசியலமப்பு(99 வது திருத்தம்) சட்டம் 2014 ம் ஆண்டு கொண்டுவரப்பட்டு 31.12.2014 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றது.
- இதில் சரத்து-124 சில திருத்தம் செய்யப்பட்டது. மேலும் 124-A, 124-B,124-C இணைக்கப்பட்டது மற்றும் சரத்து 127,128,217,222,224,224-A,231 ஆகிய சரத்துகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டது.
- இந்த 99 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 2015, அக்டோபர் 16 ம் நாள் உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது.(This amendment has been struck down by the Supreme Court's order dated 16th October, 2015 in the Supreme Court Advocates' on Record Association Vs. Union of India)

**தேசிய நீதித்துறை நியமனங்கள் ஆணையம் (சரத்து – 124 A)**

- **a)** இந்தியத் தலைமை நீதிபதி பதவிவழித் தலைவர்
- **b)** உச்சநீதிமன்றத்தின் 2 மூத்த நீதிபதிகள் பதவிவழி உறுப்பினர்களாகவும்,
- **c)** மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சர் பதவி வழி உறுப்பினர்
- **d)** பிரதமர் இந்தியத் தலைமை நீதிபதி, மக்களவையின் சபாநாயகர் ஆகியோர் உள்ள குழு நியமிக்கக் கூடிய 2 சிறந்த நபர்கள்-உறுப்பினர்கள்.

  ஆனால், அவ்வாறு நியமிக்கப்படும் நபர்களில் ஒருவர் பட்டியல் இனம், பழங்குடி இன, பிற பிற்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் அல்லது பெண்கள் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

- சிறந்த நபர்கள் 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட வேண்டும்.மீண்டும் நியமிக்க தகுதியற்றவர்கள்.
- ஆணையத்தில் பதவிகள் காலியாக உள்ளது என காரணம் காட்டி ஆணையத்தின் நடவடிக்கைகளை செயலாற்றதாகவோ கேள்வி எழுப்பவோ கூடாது

**தேசிய நீதித்துறை நியமனங்கள் ஆணையத்தின் பணிகள்(சரத்து-124B)**

- a) இந்தியத் தலைமை நீதிபதி, உச்சநீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மற்றும் உயர்நீதிமன்ற மற்ற நீதிபதிகள் பதவிகளுக்கு பரிந்துரை செய்வது.
- b) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளை ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்ற உயர்நீதிமன்றத்திற்கு பணியிட மாற்றம் செய்ய பரிந்துரை செய்வது.

**சரத்து – 124 C**

- இந்திய தலைமை நீதிபதி மற்றும் உச்சநீதிமன்ற மற்ற நீதிபதிகள் நியமனம், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம் தொடர்பாக நாடாளுமன்றம் சட்டம் இயற்றி ஒழுங்குமுறைப்படுத்தலாம்.
- ஆணையத்தின் ஒழுங்குமுறை தொடர்பாக தேர்ந்தெடுக்கும் முறை மற்றும் தேவையான பிறவற்றை ஒழுங்குபடுத்த ஆணையத்திற்கு நாடாளுமன்றம் அதிகாரமளிக்கலாம்.
- சரத்து 127-ல் "இந்தியத் தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று" என்பது "தேசிய நீதித்துறை நியமனங்கள் ஆணையம் இந்தியத் தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று குறித்தனுப்பப்படும்" என மாற்றப்பட்டது.
- சரத்து 128-ல் "இந்திய தலைமை நீதிபதி" என்பது "தேசிய நீதித்துறை நியமனங்கள் ஆணையம்" என மாற்றப்பட்டது.
- சரத்து 217-ல் "இந்தியத் தலைமை நீதிபதி, மாநில ஆளுநர், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தவிர பிற நீதிபதி எனில் "உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை ஆலோசித்த பிறகு" என்பது "சரத்து-124-ல் குறிப்பிடப்பட்ட "தேசிய நீதித்துறை நியமனங்கள் ஆணையத்தின் பரிந்துரையின்படி" என மாற்றப்பட்டது.
- சரத்து 222 ல் "இந்தியத் தலைமை நீதிபதியின் ஆலோசனைக்குப் பிறகு" என்பது "தேசிய நீதித்துறை நியமனங்கள் ஆணையத்தின் பரிந்துரையின்படியும் என மாற்றப்பட்டது.
- சரத்து 224-ல் "குடியரசுத் தலைவர் நியமிக்கலாம்" என்பது "குடியரசுத் தலைவர் தேசிய நீதித்துறை நியமனங்கள் ஆணையத்தை"ஆலோசித்து நியமிக்கலாம்" என மாற்ரப்பட்டது.
- சரத்து 224-A "உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் முன் ஒப்பம் பெற்று" என்பது "தேசிய நீதித்துறை நியமனங்கள் ஆணையத்திற்கு பரிந்துரைத்தல்படி" என மாற்றப்பட்டது.

**நீதித்துறை தனித்தியங்கும் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டுள்ள விதம்**

**(Independence of Judiciary)**

**1. பணிக்காலப் பாதுகாப்பு(Security of tenure)-** நீதிபதிகளின் நிரூபிக்கப்பட்டத் தவறான நடத்தை அல்லது தகுதியின்மை போன்ற காரணங்களுக்காக நாடாளுமன்ற ஒப்புதல் பெற்று குடியரசுத் தலைவரின் உத்தரவினால் மட்டுமே பதவி நீக்கம் செய்ய இயலும்.

2. **ஊதிய நிர்ணயம்:** நாடாளுமன்றத்தின் ஓட்டுக்கு உள்ளாகாத நீதிபதிகளின் ஊதியத்தை தங்களின் பணிக்காலத்தில் குறைக்க முடியாது.(நிதி நிலைமை நெருக்கடி காலங்களில் குறைக்கலாம்) இவர்களின் ஊதியம் மற்றும் படிகள் இரண்டாவது அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. **அதிகார வரம்பு நீட்டிப்பு: (சரத்து-138)** நாடாளுமன்றம், உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பை நீட்டிக்க மட்டுமே முடியும் குறைக்க முடியாது.

4. நீதிபதிகளின் நடத்தை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் மேற்கொள்ளக்கூடாது.(சரத்து-121)

- உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் தங்களை அவமதித்த குற்றத்திற்காக (Contempt of Court) எந்த நபரையும் தண்டிக்க அதிகாரம் உள்ளது.(சரத்து 129& 215)

5. நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறை பிரிக்கப்பட்டுள்ளது(சரத்து -50)

6. இந்திய தலைமை நீதிபதியின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் நீதிபதிகளை நியமிக்க இயலும்.

7. ஓய்வு பெற்ற பின்பு வழக்குரைஞராகப் பணியாற்றத் தடை.

**உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்புகள்**

**நீதி வழங்கும் அதிகாரங்கள்**

உச்சநீதிமன்றம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பாதுகாவலனாக விளங்குகிறது. இரண்டு முக்கிய அதிகாரங்களான முதல்நிலை விசாரணை மற்றும் மேல்முறையீட்டு அதிகாரம் ஆகியவற்றை பெற்றுத் திகழ்கிறது.

1. **அசல்/முதல் அதிகார வரம்பு(சரத்து-131)**

- உச்சநீதிமன்றத்திற்கு நேரடையாக முதன்முதலாகக் கொண்டுவரப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களை முதல் விசாரணை அதிகாரங்கள் என்று அழைக்கப்படுகின்றது.
    - **a)** மத்திய அரசாங்கத்திற்கும் ஒரு மாநில அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநில அரசாங்கங்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகள்.
    - **b)** மத்திய அரசு மற்றும் ஒரு மாநிலம் அல்லது மாநிலங்கள் ஒரு தரப்பிலும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றொரு தரப்பிலும் இருந்து எழும் வழக்குகள்.

c) மாநிலங்களுக்கிடையிலான வழக்குகள்.

- அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சிக்கல்கள் உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பில் உள்ளவையாகும்.
- நீதிப்பேராணை வழங்கும் அதிகாரம் (சரத்து -32)
- அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக உச்சநீதிமன்றத்தால் நீதிப் பேராணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

1. ஆட்கொணர் நீதிப்பேராணை
2. செயலுறுத்தும் நீதிப்பேராணை
3. தடைப்பேராணை
4. ஆவணக்கேட்புப் பேராணை
5. தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை

உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் மேற்கண்ட ஐந்து ஆணைகளை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசியலமைப்பில் வெளியிட்டுள்ளது. இதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே உச்சநீதிமன்றம் அரசியலமைப்பின் பாதுகாவலன் என அழைக்கப்படுகிறது.

**உச்சநீதிமன்றத்தின் அசல் அதிகார வரம்பிலிருந்து விலக்கி வைக்கப்பட்டவைகள்**

- அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் போன்றவை தொடர்பான வழக்குகள்.
- அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன் இந்திய டொமினியன் அரசும், இந்திய சுதேசி அரசர்களும் செய்து கொண்ட உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் தொடர்பான வழக்குகள்.
- நதி நீர் பற்றிய மாநிலங்களுக்கு இடையே தோன்றும் வழக்குகள் (சரத்து -262)
- நிதி ஆணைக் குழுவிடம் விடப்படக் கூடிய விபரங்கள் (சரத்து- 280)

**மேல் முறையீட்டு அதிகார வரம்பு (Appellate Jurisdiction)**

சிவில், குற்றவியல் மற்றும் அரசியலமைப்பு தொடர்பான வழக்குகளில் உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக ஒருவர் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம். அதற்கு உயர்நீதிமன்றத்தின் ஒப்புதலும் தேவை.

இத்தகைய, உயர்நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைத்தான் மேல்முறையீட்டு அதிகாரங்கள் என்கிறோம்.

**1. அரசியலமைப்பு குறித்த வழக்கில் மேல்முறையீடு (சரத்து- 132)**

இந்தியாவில் உள்ள உயர்நீதிமன்ற தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது இறுதி உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம். உரிமையியல், குற்றவியல் அல்லது வேறு நடைமுறையில் உள்ளார்ந்த வினா பொதிந்து அரசியலமைப்பு திறனறி செய்ய வேண்டும் என உயர்நீதிமன்றம் சான்றளித்தால், உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

**2. உரிமையியல் குறித்த வழக்கில் மேல் முறையீடு (சரத்து -133_**

இந்தியாவில் உள்ள உயர்நீதிமன்றம், உரிமையியல் குறித்த தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது இறுதி உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம்.

உள்ளார்ந்த வினா பொதிந்து உச்சநீதிமன்றம் திறனறி செய்ய வேண்டும் என உயர்நீதிமன்றம் சான்றளித்தால், உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

**3. குற்றவியல் குறித்த வழக்கில் மேல் முறையீடு (சரத்து -134)**

- உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டில், குற்றம் சாட்டப்பட்டவரின் விடுதலையை ரத்து செய்து மரண தண்டனை விதித்தால்

அல்லது

- தனது அதிகாரத்திற்குட்பட்ட கீழ்நீதிமன்றத்தில் இருந்து திரும்பப் பெற்று, விசாரணை நடத்தி குற்றம் சாட்டப்பட்டவருக்கு மரண தண்டனை விதித்தால்,

அல்லது

- வழக்கு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய பொருத்தமானது என சான்றளித்தால் மேல்முறையீடு செய்யலாம்.

**4. சிறப்பு அனுமதி மேல் முறையீடு(சரத்து-136)**

உச்சநீதிமன்றம் தனது தன்விருப்புரிமையை பயன்படுத்தி, எந்த நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்புரை, தீர்ப்பானை, நிர்ணயம், தண்டனை அல்லது ஆணையத்தின் மேல்முறையீட்டிற்கு சிரப்பு அனுமதி வழங்கலாம்.

ராணுவச் சட்டங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களுக்கு வழங்கும் தீர்ப்புகளுக்கு சிறப்பு அனுமதி மேல்முறையீடு பொருந்தாது.

**உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பை விரிவாக்குதல் (சரத்து-138)**

- நாடாளுமன்றம் சட்டம் இயற்றக்கூடிய மத்தியப் பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பானவற்றில் அதிகாரம் உள்ளது.
- மத்திய அரசு அல்லது மாநில அரசு, சிறப்பு ஒப்பந்தத்தின்படி விடயங்கள் தொடர்பான கூடுதல் அதிகார வரம்பு உள்ளது.

**சரத்து-139**

- நீதிப்பேராணைகள் உள்ளிட்ட ஆணைகள், வழிகாட்டுதல்கள் பிறப்பிக்க நாடாளுமன்ற சட்டம் மூலம் அதிகாரம் வழங்கலாம்.

**நிர்வாகப் பொறுப்புகள்**

- பாதிக்கப்பட்டவர்களுக்கு  நீதி கிடைப்பதற்காக, பல அடுக்குகளில் நீதிமன்றங்கள் சங்கிலித் தொடர்போல அமைந்துள்ளன.
- மாநிலங்களில் உயர்நீதிமன்றங்கள் உள்ளன. சில உயர்நீதிமன்றங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களின் அல்லது மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வழக்குகளை எடுத்துக் கொள்கின்றன. உயர்நீதிமன்றத்திற்கு கீழே பலவிதமாஅன சார்பு நீதிமன்றக்கள் உள்ளன.
- இந்தியாவிலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் உச்சநீதிமன்றத்தின் நிருவாகம் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன.
- அண்மைக் காலத்தில் விரைவாகவும், குரைந்த செலவிலும் நீதி குடைப்பதற்காக, குறிப்பாக ஏழை மக்களுக்குக் கிடைப்பதற்காக லோக் அதாலத் எனப்படும் மக்கல் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- 1987 ம் ஆண்டின் சட்டத்தின்படி லோக் அதாலத் எனப்படும் மக்கள் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டன. இவை நீண்டகாலம் தேங்கி இருக்கும் வழக்குகளை விரைவாக விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றன. இதன்மூலம், மக்கள் தங்களின் பணம், நேரம், சக்தியைப் பாதுகாக்கலாம்.
- குற்றவியல் வழக்குகளைத் தவிர, மற்ற அனைத்து வழக்குகளுக்கும் இந்நீதிமன்றங்களின் மூலம் தீர்வுக் காணலாம்.

**நீதிப் புனராய்வு**

- சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் எந்த ஒரு சட்டத்தயும் அரசியலமைப்புச் சட்டவிதிகளுக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கும் உச்சநீதிமன்றத்தின் அதிகாரத்தையும் நீதிமன்ற மறுபரிசீலனை என்கிறோம்.
- இந்த சட்ட மறுபரிசீலனையின்படி, இந்தியாவில் உள்ள நாடாளுமன்றம் உள்ளிட்ட ந்த ஒரு சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தையும், அது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை விதிகளுக்கு முரணானது என்று கண்டால், அந்தச் சட்டம் “செல்லுபடியாகாது”என்று அறிவிக்கும் உரிமையை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது.
- நிருவாக அமைப்பு மற்றும் சட்டமன்றங்கள் வரம்பு மீறிச் செயல்படுவதை இந்த ‘மறுபரிசீலனை’ கட்டுப்படுத்துகிறது. எனவே, உச்சநீதிமன்றத்தை “அரசியலமைப்பின் பாதுகாவலன்” என்று மிகச் சரியாகக் குறிப்பிடுகின்றனர்.

**ஆலோசனை கூறும் அதிகார வரம்பு (சரத்து-143)**

- பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பிரச்சனையோ அல்லது பெரும்பான்மைப் பிரச்சனையோ எழும்போது அல்லது அதுபோல் எழுவதற்கு வாய்ப்புள்ளது என குடியரசுத்தலைவர் கருதும்போது அது குறித்து கேட்கும்போது குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்கலாம்.
- உச்சநீதிமன்றத்தின் அசல் அதிகார வரம்பில் இருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ள விவரங்கள் குறித்து குடியரசுத் தலைவர் கேட்டால் அவருக்கு தன்னுடைய கருத்தினை வழங்கல் வேண்டும்.

- குடியரசுத் தலைவர் ஆலோசனை கேட்டால் உச்சநீதிமன்றம் ஆலோசனை வழங்க கட்டுப்பட்டதல. அவ்வாறு ஆலோசனை கொடுத்தால் அந்த ஆலோசனை குடியரசுத் தலைவரைக் தலைவரைக் கட்டுப்படுத்தாது.
- ஆனால் இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்பு உள்ள ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் குறித்து ஆலோசனை கோரப்பட்டால் உச்சநீதிமன்றம் ஆலோசனை கொடுத்தல் வேண்டும். அவ்வாறு ஆலோசனை கொடுக்கப்பட்டால் அது குடியரசுத் தலைவரைக் கட்டுப்படுத்தும்.

**பொதுவான அதிகாரங்கள்**

- நீதிமுறை மறுசீராய்வு (Judicial Review)- இயற்றப்படும் சட்டங்கள் மற்றும் நிர்வாகத்துறை செயல்கள் அனைத்தும் அரசியலமைப்பிற்கு உட்பட்டதாக இருக்கிறதா என்றும், மீறப்பட்டிருப்பின் மறுசீராய்வு செய்து அச்சட்டம் செல்லாது என அறிவிக்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரமுள்ளது.
- தனது தீர்ப்புகளை மறுசீராய்வு செய்யும் அதிகாரம்(Review its own judgements)(சரத்து-137)

1. சான்றுகள் குறித்த புதிய விவரங்கள் கண்டறியப்பட்டால்
2. ஆவணத்தின் முகப்பிலேயே தோன்றும் தவறு அல்லது பிழை.
3. வேறு ஏதேனும் போதுமான காரணங்கள் இருப்பின்.

- நீதிமன்றம் தனது அதிகார வர்ம்பினை திறம்பட செயலுறுத்த உச்சநீதிமன்றத்திற்கு துணை அதிகாரங்கள் வழங்கி நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.(சரத்து-140)
- உச்சநீதிமன்றத்தின் முடிவுகள் இந்திய நீதிமன்றங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தும்(சரத்து-141)
- இந்தியாவில் உள்ள அனைத்து அதிகார அமைப்புகளும் உச்சநீதிமன்றத்திற்கு உதவும் வகையில் செயலாற்றுதல் வேண்டும்.(சரத்து-144)

**விதிகள் உண்டாக்கும் அதிகாரம்(சரத்து -145)**

- தனது நடப்பு முறையையும், நடைமுறைகளையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன், தானே விதிகள் உண்டாக்கும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திற்கு உள்ளது.

**a)** நீதிமன்றத்தில் பணிசெய்யும் நபர்கள் தொடர்பான விதிகள்

**b)** மேல்முறையீடுகளை விசாரிப்பது தொடர்பான வகைமுறைகள்

**c)** பகுதி III ல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை செயல்படுத்துவது

(cc) சரத்து 139 A ன் கீழ் உள்ள நீதிமன்ற நடைமுறைகள் தொடர்பாக

(d) சரத்து 134 ம் கீழ் மேல் முறையீடுகளை ஏற்றுக் கொள்வது

(e) மறுஆய்வு செய்வது தொடர்பான விதிகள்

(f) நீதிமன்ற கட்டணம் தொடர்பான விதிகள்

(g) பிணை வழங்குவது

(h) நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்

(i) சுருக்குமுறை விசாரணை

- **பதிவு செய்து கொள்ளும்(Court of Record)** அதிகாரமுள்ளது. இதன்படி உச்சநீதிமன்றத்தின் பதிவேடுகளை சாட்சியப் பதிவேடுகளாக பயன்படுத்தலாம்.(சரத்து-129)
- உச்சநீதிமன்றம் டெல்லியில் உள்ளது. இதை வேறு இடத்திர்கு மாற்றும் அதிகாரம் இந்தியத் தலைமை நீதிபதிக்கு உள்ளது. ஆனால் அதற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டும்.(சரத்து-130)
- ஒரு சட்டத்தின் உள்ளார்ந்த போன்ற கேள்விகள் இருந்து அது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது உயர்நீதிமன்றங்களில் இருக்கும்போது, தானாகவோ அல்லது இந்தியத் தலைமை வழக்குரைஞரின் விண்ணப்பத்தின் பேரிலோ தானே விசாரிக்க அதிகாரம் உள்ளது(சரத்து-132).

**வழக்கினை மாற்றும் அதிகாரம் (சரத்து-139 A)**

- ஒரு வழக்கினை ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு உயர்நீதிமன்றத்திற்கு மாற்றும் அதிகாரம் உச்சநீதிமன்றத்திற்கு உள்ளது.
- ஒரே மாதிரியான சட்டப் பிரச்சினை உள்ள பொது முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள் உச்சநீதிமன்றம் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர்நீதிமன்றங்களில் நிலுவையில்

இருந்தாலோ, தானாகவோ அல்லது இந்தியத் தலைமை வழக்குரைஞர்/ தரப்பினர் மனுச் செய்தால் உச்சநீதிமன்றம் அந்த வழக்கை தாமே ஏற்றுக் கொண்டு விசாரித்து தீர்ப்பு அளிக்கலாம்.

**இந்தியத் தலைமை நீதிபதிகள்**

| | பெயர் | பதவிக்காலம் |
|---|---|---|
| 1 | ஹரிலால் ஜெகிசுந்தாஸ் கனியா | 26.11.1950 முதல் 6.11.1951 |
| 2. | எம். பட்டஞ்சலி சாஸ்திரி | 7.11.1951 முதல் 3.1.1954 |
| 3. | மஹர் செந்த் மஹாஜன் | 4.1.1954 முதல் 22.12.1954 |
| 4 | பிஜன் குமார் முகர்ஜி | 23.12.1954 முதல் 31.1.1956 |
| 5. | சுதி ரஞ்சன் தாஸ் | 1.2.1956 முதல் 30.9.1959 |
| 6 | புவனேஸ்வர் பிரசாத் சின்கா | 1.10.1959 முதல் 31.1.1964 |
| 7. | P.B.கஜேந்திர கட்கர் | 1.2.1964 முதல் 15.3.1966 |
| 8 | A.K.சர்கார் | 16.3.1966 முதல் 29.6.1966 |
| 9 | கே.சுபாரவ் | 30.6.1966 முதல் 11.4.1967 |
| 10 | கே.என்.வான்சூ | 12.4.1967 முதல் 24.21968 |
| 11 | எம்.இதயத்துல்லா | 25.2.1968 முதல் 16.12.1970 |
| 12 | ஜே.சி.ஹா | 17.12.1970 முதல் 21.1.1971 |
| 13 | எஸ்.எம்.சிக்ரி | 22.9.1971 முதல் 25.4..1973 |
| 14 | ஏ.என்.ராய் | 26.4.1973 முதல் 28.1.1977 |
| 15 | எம். ஹமீதுல்லா பெக் | 29.1.1977 முதல் 24.2.1978 |
| 16 | ஒய்.வி.சந்திரசுட் | 22.2.1978 முதல் 11.7.1985 |
| 17 | பி.என்.பகவதி | 12.7.1985 முதல் 20.12.1986 |
| 18 | ஆர்.எஸ்.வெங்கடராமையா | 19.6.1989 முதல் 17.12.1989 |
| 19 | ஈ.எஸ்.வெங்கடராமையா | 19.6.1989 முதல் 17.12.1989 |

| | | |
|---|---|---|
| 20 | சப்யாசச்சி முகர்ஜி | 18.12.1989 முதல் 25.9.1990 |
| 21 | ரங்கநாத் மிச்ரா | 25.9.1990 முதல் 24.11.1991 |
| 22 | கே.என்.சிங் | 25.11.1991 முதல் 12.12.1991 |
| 23 | எம்.எச்.கனியா | 13.12.1991 முதல் 17.11.1992 |
| 24 | எல்.எம்.சர்மா | 18.11.1992 முதல் 11.2.1993 |
| 25. | எம்.என்.வெங்கட செல்லையா | 12.2.1993 முதல் 24.10.1994 |
| 26 | ஏ.எம்.அகமதி | 25.10.1994 முதல் 24.3.1997 |
| 27 | ஜே.எஸ். வர்மா | 25.3.1997 முதல் 17.1.1998 |
| 28 | எம்.எம்.பந்சி(பந்ச்சி) | 18.1.1998 முதல் 9.10.1998 |
| 29. | ஏ.எஸ்.ஆனந்த் | 10.10.1998 முதல் 31.10.2001 |
| 30 | எஸ்.பி.பரூசா | 1.11..2001 முதல் 5.5.2002 |
| 31 | B.N.கிர்பால் | 6.5.2002 முதல் 7.11.2002 |
| 32 | ஜி.பி.பட்நாயக் | 8.11.2002 முதல் 18.12.2002 |
| 33. | வி.என்.காரே | 19.12.2002 முதல் 1.5.2004 |
| 34 | எஸ்.ராஜேந்திரபாபு | 2.5.2004 முதல் 31.10.2005 |
| 35 | ஆர்.சி.லகோத்தி | 1.6.2004 முதல் 31.10.2005 |
| 36 | ஒய்.கே.சபர்வால் | 1.11.2005 முதல் 13.1.2007 |
| 37 | கே.ஜி.பாலகிருஷ்ணன் | 14.1.2007 முதல் 12.5.2010 |
| 38 | எஸ்.ஹச். கபாடியா | 12.5.20010 முதல்28.9.2012 |
| 39 | அல்டமஸ் கபீர் | 29.9.2012 முதல் 18.1.2013 |
| 40 | P.சதாசிவம் | 19.7.2013 முதல் 26.4.2014 |
| 41 | ஆர்.எம்.லோதா | 27.4.2014 முதல் 27.9.2014 |
| 42 | எச்.எல்.தத்து | 28.9.2014 முதல் 2.12.2015 |

| | | |
|---|---|---|
| 43 | T.S.காக்கூர் | 3.12.2015 முதல் 3.1.2017 |
| 44 | ஜெகதீஷ் சிங் கெஹர் | 4.1.2017 முதல் 27.08.2017 |
| 45 | தீபக் மிஸ்ரா | 28.08.2017 முதல் 2.10.2018 |
| 46 | ரஞ்சன் கோகோய் | 03.10.2018 முதல் 17.10.2019 |
| 47 | எஸ். ஏ. பாப்டே | 18.11.2019 முதல் |

**இந்தியத் தலைமை கணக்காயர் (ம) தணிக்கைத் துறை தலைவர்**

**(Comptroller and Auditor General of india)**

**( Article 148-151)**

- இந்தியத் தலைமை கணக்காயர் மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரை நியமிக்கும் அதிகாரம் உள்ளவர் குடியரசுத் தலைவர் ஆவார்.
- பதவிப் பிரமாணம் குடியரசுத் தலைவரின் முன்னிலையில் எடுக்க வேண்டும்.
- இவரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்றால் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்குவதற்குள்ளான நடைமுறைகளின் படி நீக்க வேண்டும்.
- ஊதியம் மற்றும் பணிக்கான பிற நிலைகளை நாடாளுமன்றம் நியமிக்கும்.
- இவரது ஊதியம் இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளது.
- பதவிக் காலத்தில் இவரது ஊதியம் மற்றும் பிற உரிமைகளை குறைக்க முடியாது.
- பணிக்கால ஓய்விற்குப் பிறகு மத்திய அல்லது மாநில அரசுகளின் கீழ் எந்தப் பதவியையும் வகிக்க முடியாது.
- இவரின் நிர்வாகச் செலவுகள் மற்றும் அலுவலகம் தொடர்பான அனைத்தும் இந்தியத் திரட்டு நிதியிலிருந்து அளிக்கப்படும்.(ஓட்டெடுப்பிற்கு உட்படாது)

**கடமைகள் & அதிகாரங்கள்**

- ஒரு கணக்காளர் என்ற முறையில் இவர் இந்தியத் திரட்டு நிதியிலிருந்து எடுக்கப்படும் அனைத்து தொகைகலின் கட்டுப்பாட்டினை வைத்திருக்கிறார்.

- ஒளஉ தணிக்கையாளர் (Auditor) என்ற முறையில் மத்திய மற்றும் மாநில அரசால் செலவழிக்கப்படும் எல்லா தொகைகளையும் தணிக்கை செய்கின்றார்.
- இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துரையில் பணியாளர் நிலைப்பாடுகள் மற்றும் இந்திய கணக்காய்வு மற்றும் தனிக்கைத் துரை தலைவரின் நிர்வாக அதிகாரங்கள் ஆகியவற்றை இவரிடம் ஆலோசித்த பிறகு குடியரசுத் தலைவர் விதிகள் வகுப்பார்.
- மத்திய மற்றும் மாநிலங்களின் கணக்குகள் இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத்துறை தலைவரின் அறிவுரையின் பேரில் குடியரசுத் தலைவர் வகுத்துக் கொடுக்கும் படிவத்தில் வைக்க வேண்டும். (சரத்து-150)
- மத்திய அரசின் கணக்கு மற்றும் தணிக்கை தொடர்பான அறிக்கைகளைக் குடியரசுத் தலைவரிடம் கொடுக்க வேண்டும். அதை அவர் நாடாளுமன்றத்தின் அவைகளில் முன்வைப்பார்.(சரத்து-151)
- மாநிலத்தின் கணக்குகளை மாநில ஆளுநரிடம் சமர்பிக்க வேண்டும். அவர் அதை சட்டமன்ற அவைகளில் முன் வைப்பார். (சரத்து-151)

winmeen.com